உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | விரோதிகிருது - மார்கழி – 10–1–72 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பழையன கழிதலும் :: :: புதியன புகுதலும்

'பழமை' என்றால் சிலருக்கு விருப்பம் உண்டாதல் இல்லை; 'புதுமை' என்றால்தான் விருப்பம் உண்டாகின்றது; இவர்களை, 'புதுமைப் பித்தர்கள்' என்கின்றார்கள். இப்படியே சிலருக்கு, 'புதுமை' என்றால் விருப்பம் உண்டாகாமல், 'பழமை' என்றால்தான் விருப்பம் உண்டாகின்றது. இவர்களை, 'பழமை விரும்பிகள்' என்கிறார்கள். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கால வெள்ளத்தால் பழையன பல மறைகின்றன; புதியன பல தோன்றுகின்றன.

அஃது எவ்வாறாயினும், விரும்புதல், விரும்பாமை என்பவற்றை, 'பழமை, புதுமை' என்னும் அவை பற்றியே கொள்ளுதல் பொருந்துவதன்று. ஏனெனில், பழமைக்கு ஒரு

பெருமை இருப்பினும் பழமையானவற்றிலும் காலத்திற்கு ஒவ்வாதன சில இருத்தல் கூடும். அவ்வாறே புதுமையை ஏற்பதில் தயக்கம் உண்டாதல் இயல்பாயினும், புதுமையான வற்றிலும் காலத்திற்கு ஏற்புடையனவாய் வரவேற்கத்தக்கன சில இருத்தல் இயல்பே. சந்தாநாசாரியராகிய உமாபதி சிவாசாரியார், நூல்களைப் பற்றிக் கூறும்பொழுதே,

"தொன்மையவாம் எனும்எவையும் நன்றாகா; இன்று *
தோன்றியநூல் எனும்எவையும் தீதாகா"

என்று கூறுகின்றார். வடமொழியிலும் காளிதாசர் இவ்வாறு கூறியிருத்தல் அறியத்தக்கது. எனவே, 'பழையன எல்லாம் பெருமையுடையன; புதியன எல்லாம் பெருமைக்கு உரியன அல்ல' என்பதற்கில்லை என்பது விளங்குகின்றது.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்ற நன்னூல் சூத்திரம் இக் கருத்தையே தெள்ளத்தெளிய எடுத்துக் கூறுகின்றது. 'அதில், கால வகையினானே" என்ற தொடர் முதன்மையாகக் கருதத்தக்கது.

'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்ற தொல்காப்பியச் சூத்திரமே மேற்காட்டிய நன்னூல் சூத்திரத்திற்கு மூலம். அது பலர்க்கு விளங்குதல் அரிது. அதனால், அதன் கருத்தை நன்னூலார் பலரும் அறிய எளிமையாக மேற்காட்டியவாறு விளங்கக் கூறினார். தொல்காப்பியத்தில் உள்ள இலக்கணங்களை எளிமையாக்கித் தர எழுந்ததே நன்னூல் என்பது இங்கு நினைவுகூரத் தக்கது.

காலவகையினால் பழையன கழியப் புதியன புகுதலைத் தெரிவிப்பதே, வருகின்ற பொங்கற் புதுநாள். ஆம்! புதுநாள்! 'புதுநாள்', வருகின்றபொழுதே பொங்கிக்கொண்டு வருகின்றது. அடுப்பில் பால் பொங்குதல் மட்டுமன்று: அனைவருடைய உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்கவும் அது வருகின்றது.

---

* पुराणमित्येव नसाधु सर्वम् ।
नचाऽपिकाव्यं नवमित्यवद्यम् ॥

இப் பொங்கற் புதுநாள் தைத்திங்களின் தோற்றமாக அமைவது ஏன்? அஃது உற்று நோக்கவேண்டிய ஒன்றுதான்.

"காலவகையினனே" என மேற்குறித்த காலதத்துவம், அவ்வவ் வுயிருக்கேற்ற வகையில் சிறியதும், பெரியதுமாகப் பல்வேறு வகையில் அமைந்து அவற்றை நடத்துகின்றது நமக்கு ஒருநாளாகக் காட்சி யளிக்கின்ற காலம். சில உயிர்களுக்குத் தோன்றி வாழ்ந்து மறையுங் காலமாகி விடுகின்றது. அதுபோலவே நமக்கு ஒரு கிழமையாகத் தோன்றுகின்ற காலமும் சில உயிர்கட்கு வாழ்நாள் எல்லையாகி விடுகின்றது. இப்படியே நமக்குப் பல தலைமுறைகளாகக் காணப்படுகின்ற காலம், சில மர வகைகட்கு வாழ்நாள் அளவாக உள்ளது. இவையெல்லாம் நாம் கண்கூடாகக் காண்பவை. இவைபோலவே நூல்களில் கேட்கப்படுவது, நமக்கு ஓராண்டுக் காலம்' தேவர்கட்கு 'ஒருநாள்' என்பது.

காலத்தை, 'பெரும்பொழுது. சிறுபொழுது' எனப் பிரித்தனர் நம் முன்னோர். ஆண்டின் உட்பிரிவே பெரும்பொழுது. ஒருநாளின் உட்பிரிவே சிறுபொழுது. இரண்டு மாதம் ஒரு பெரும்பொழுதாக ஆறு பெரும்பொழுதுகள் சொல்லப்படுகின்றன; இதில் வேறுபாடு இல்லை. ஆனால் சிறுபொழுது 'ஆறு' என்று ஒரு கருத்தும், 'ஐந்து' என்று ஒரு கருத்தும் உள்ளன.

ஓராண்டுக் காலத்தை, 'உத்தராயணம் தட்சிணாயனம்' என்ற வகையில் இரண்டாகக் கூறுவதும் ஒருவகைப் பிரிவே. உத்தராயணம், வடபாற் போக்கு; அஃதாவது நமது நாட்டில் சூரியன் வடதிசை நோக்கிச் செல்வதுபோலக் காணப்படுவது. தட்சிணாயனம் தென்பாற் போக்கு; சூரியன் தென்திசை நோக்கிச் செல்வதுபோலக் காணப்படுவது. ஓராண்டுக் காலம் தேவர்களுக்கு ஒருநாளாய் அமைகின்ற நிலையில், உத்தராயணம் பகலாகவும், தட்சிணாயனம் இரவாகவும் அவர்கட்கு அமைகின்றது.

தை முதல்நாள் தொடங்கி, ஆனி இறுதிநாள் முடிய உள்ள ஆறு திங்கள் உத்தராயணம், ஆடி முதல்நாள் தொடங்கி, மார்கழி இறுதிநாள் முடிய உள்ள ஆறு திங்கள் தட்சிணாயனம். எனவே தேவர்கட்குப் பகற்காலம் தோன்று

கின்ற நாள் தை முதல்நாள் ஆதலின், அந்நாளே நமக்கும் புதுத் திருநாளாய் அமைகின்றது. ஒவ்வொரு நாளிலும், இருள் நிறைந்த இராக்காலம் நீங்கி ஒளியுடைய பகற்காலம் தொடங்கும் பொழுது, உலகமே புதியதாகவும், வாழ்வு புதியதொரு வாழ்வாகவும் தோற்றம் அளிக்கின்றன.

இரவில் உறங்கியெழுந்தபின் காலையில் ஒரு புத்துணர்ச்சி தோன்றுகின்றது; அதனால், தேவர்களுக்குப் பகலின் தோற்றமாகிய தை மாதப் பிறப்பு மக்களுக்குப் புத்தம் புதிய நாளாக விளங்குவதில் வியப்பில்லை.

தை மாதப் பிறப்புத் தேவர்கட்குப் பகற்காலத் தொடக்கமாதல் பற்றியே அப்பெருநாளில் பகலவனை வழிபடுதல் மரபாக உள்ளது. இந்நாள் பகலின் தொடக்கம் எனவே, இதற்கு முற்பட்ட மார்கழித் திங்கள் தேவர்கட்கு வைகறைப் பொழுது என்பது சொல்லாமலே விளங்கும். கூத்தப்பெருமானுக்கு அபிடேக காலம் ஆறும், தேவர் நாளின்வழியே அமைந்தது. அவற்றுள் திருவாதிரையில் நிகழும் அபிடேகம் விடியலில் நிகழும் முதற்கால அபிடேகமாகும். மார்கழித்திங்கள் தேவர்கட்கு விடியற்காலமாதல் பற்றி இத்திங்கள் முழுவதிலும் விடியலில் எழுதலும், திருப்பள்ளி எழுச்சிக் காலத்தில் ஆலயங்களில் வழிபாடு நிகழ்தலும் நியதியாகச் செய்யப்பெறுகின்றன. இத்திங்கள் முழுதும் இவைகள் தவருது நிகழின், ஆண்டு முழுவதும் இவை தவருது நிகழ்ந்ததற்கு நிகராகும் இச்சிறப்புப் பற்றியே மார்கழித்திங்கள் முழுவதிலும் உலகியற் செயல்கள் ஒதுக்கி வைக்கப்படுகின்றன. முதற்பெருங் கடவுளாகிய சிவபெருமானுக்கு மிகச் சிறந்த திருநாளாகிய திருவாதிரைத் திருநாளும் மார்கழித் திங்களிலே வருதல் நோக்கத்தக்கது.

தேவர்கட்கும் புதுமையை விளைக்கின்ற பொங்கற் பெருநாள் வருதலை முன்னிட்டு மக்களும் பழைய இல்லங்களையும் தூய்மைசெய்து பல வகையில் புதுக்கி அமைப்பர். பழங் கலங்களை நீக்கிவிட்டுப் புதுக் கலங்களைக் கொணர்ந்து அடுக்கிவைத்து புதியவற்றையே ஆளத் தொடங்குவர் அரிசி, பயறு, கரும்பு, மற்றும் காய் கனி முதலிய அனைத்தும் புதியனவாகவே விளைந்தவற்றையே கொள்வர். 'தேவர் தலைவன்' என்ற முறையில் இந்திரனை வழிபடும் நாளே

பொங்கற் புதுநாட்கு முன்னாள் கொண்டாடப்படுகின்ற போகி பண்டிகை. போகி - இந்திரன். இவன் மருத நிலத் தெய்வம். ஆதலால், அந்நிலத்தில் புதியனவாய் விளைந்த பொருள்களை அந்நிலத்தலைவனுக்கே முதலில் படைத்து அவனை வழிபடுவர்.

தை பிறந்தவுடன் சிறந்த வகையில் புதுப்பானை, புது மஞ்சள் முதலியவற்றுடன் பாற்பொங்கல் செய்து பகலவனை வழிபடுவது பெரும்பொங்கல் நாள். புது விளைவைத் தேவர் கட்கும் படைத்துத் தாங்களும் உண்டு மகிழ்கின்ற மக்கள், அவ் விளைவிற்குச் சிறந்த காரணமாய் அமைந்த மாடுகளையும் வழிபடத் தவறுவதில்லை. அந்தப் பெருநாளே மாட்டுப் பொங்கலாய்த் திகழ்கின்றது. இனி மாடுகளின் கால்வழி பெருகுதற்கு மாட்டுப் பொங்கலை அடுத்துக் கன்று பொங்க லும் கொண்டாடுவர். கன்று பொங்கலைக் கன்னிப்பொங்கல் என்றும் சொல்லிக் கன்னியர் கொண்டாடி மகிழ்வர். இவ் வாறு பல வகையிலும் மக்களைப் பழையன கழித்துப் புதியன புகுத்திப் புது வாழ்வில் புகச்செய்வது பொங்கற் பெருநாள். அந்நாள் அண்மையில் வர இருக்கின்றது. அதன்கண் பாற் பொங்கல் பாங்குறப் பொங்குவதுடன், நாடும் நல்லமைதி பெற்று, மக்கள் அனைவரும் மனமகிழ்ச்சியுடன் சிறந்துவாழ மாதேவன் முதல் தேவர் பலரும் செவ்விதின் அருளுவாராக.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பொன் மொழி

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்கிறது பாட்டி பழ மொழி. அப்படியிருக்க நம்முடைய காலத்துக்கு - கருத்துக்கு ஏற்றுற்போலக் கண் முதலிய இந்திரியங்களுக்கு இன்பத்தை அளந்து இறுதிவரையில் கொடுத்துக்கொண்டே இருக்கின்ற உபகாரத்தை - உபகாரியை மறக்கலாமோ? உலக இன்பங்களை அனுபவிக்கக் கண்ணுக்குப் பார்வையையும்; காதுக்குக் கேட்கும் சக்தியையும்; உடம்புக்குத் தன்னளவில் வியாபகமாகிய ஸ்பரிச சக்தியையும் தந்து காக்கின்ற உபகாரியை மறக்கலாமோ?

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

பொங்கற் புதுநாளிற்கு வழங்கிய

அருளுரை

"ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம்ஆதியே"

புதியனவற்றில் விருப்பும் பழையனவற்றில் வெறுப்பும் உண்டாவது உயிர்களின் இயல்பு. ஆனால் புதியனவற்றுள் தமக்குப் பெருநன்மை கிடைக்கும் என்றே நாட்டம் செலுத்துகின்றனர் மக்கள். புதியவை பொலிவையும் உற்சாகத்தையும் பெரும்பாலும் கொடுக்குமேயன்றிப் பெருநன்மையைக் கொடுத்துவிடாது. அப்படியிருந்தும் புதியவற்றுள் எல்லோரும் மோகம் கொள்கின்றனர்.

புதியனவும் இறைவன் படைப்பே. பழையனவும் இறைவன் படைப்பே. இறைவன் அருளின்றிப் புதியனவும் தோன்றா. பழையனவும் நில்லா. புதுமைக்குப் புதுமையாய் பழமைக்குப் பழமையாய் உள்ளவனே பரமன். இதனை மணிவாசகர், "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே,பின்னைப்புதுமைக்கும்பேர்த்தும்அப்பெற்றியனே"

என்னும் திருவெம்பாவைச் சொற்றொடரால் தெளிவு படுத்துகின்றார். இறைவன் உயிர்களுக்குப் புதுமை யாற் பொலிவைக் காட்டி, பழமையால் வளமை காட்டி வாழ்விக்கின்றான். புதுமையை விரும்புகிற மக்கள் புதிய தான்யங்களைப் பெரிதும் விரும்பாமல் பழைய தான்யங்களையே விரும்புகின்றனர். இதனால் பழமையில் நன்மை இருப்பதை எல்லோரும் உணர்கின்றனர் என்பது தெளிவாகிறது.

எந்தத்துறையிலும் மக்கள் புதியவர்களைச் சிலநேரம் விரும்புவரே தவிர வாழ்க்கையில் எப்பொழுதும் விரும்புவ தில்லை. ஆனால், மக்கட்கு உணர்ச்சியையும் உற்சாகத் தையும் அளித்து ஊக்கப்படுத்துவது புதுமை. இவற்றைச் சரிவரப்புரிந்துகொண்டு வாழ்க்கையில் உயிர்கள் வளர்ச்சி யடையவேண்டும் என்பதே இறைவன் திருவுள்ளம். அதற் காகவே, திருவிழாக்களை அமைத்து விழாக்களின் மூலம் புதுமைப்பொலிவையும் விழிப்பையும் உற்சாகத்தையும் ஊட்டி உணர்ச்சியினாலும் உற்சாகத்தினாலும் நல்லன வற்றையும் தீயனவற்றையும் அனுபவிக்கச் செய்து, பட்டறிவு எனப்படும் அனுபவ அறிவைப் பெறச்செய்து என்றும் பழமையாக - நிலைபேறாக உள்ள நலனை அடையச் செய்வது இறைவனின் செயல்முறைகள்.

அவ்வருளிப்பாட்டில் ஆண்டுதோறும் பழையன கழிந்து புதியன புகுந்து பொலிவைப் பெருக்கும் பொங்கற் புது நாளில் புதியன போற்றிப் பழையன பாராட்டிப் பண்பை வளர்த்து, பலருக்கும் பயனுடையவர்களாக வாழ, சங்கற்பம் செய்துகொள்வதும் புதியவற்றில் ஒன்றாகவே ஆறறிவு பெற்ற மனித இனம் கொள்ளவேண்டும். இந்நிலையை மக்களனைவரும் இப்பொங்கற் புதுநாளில் மேற்கொண்டு எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பார்கள் என்பது உறுதி. இந்நல்லுணர்வை - நற்செயலை எல்லோருக்கும் வழங்க வேணுமாய் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளைப் பிரார்த்திக் கிறோம்.

உதிர்ந்த மலர்களில் பொறுக்கிய மலர்கள்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.

திரு. ச. தண்டபாணி தேசிகர்

அடியேனுடைய ஆசிரியப் பெருந்தகை மகாமகோபாத்யாய ஐயரவர்கள் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு ஏடுகள் தேடுவதற்காக, திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்கு வந்தார்களாம். அப்போது எழுந்தருளியிருந்த குருமணியவர்கள் ஏட்டுச் சுவடிகள் அனைத்தையும் காண்பிக்க உத்தரவிட்டார்கள்.

ஐயரவர்கள் பாட்டும் தொகையுமாகக் கிடைக்கும் பெருங்காப்பியம் தொல்காப்பியமாகக் கிடைக்குமென ஐயரவர்கள் இருந்து ஆர அமர ஏடுகளைப் பார்த்து வந்தார்கள். புரட்டப் புரட்ட சிவதருமோத்தரச் சுவடிகளே காணப்பட்டன. சற்றேக்குறைய எழுபது எண்பது சுவடிக்கு மேல் சிவதருமோத்தரச் சுவடிகளே காணப்பட்டன. அலுப்புத்தான். ஆனாலும் அதிலும் ஓர் வியப்பு; ஐயரவர்கட்கு முன்னரே தெரியும்.

ஐயரவர்கள் பிள்ளையவர்களிடத்துப் பாடம் கேட்கும்போது நடந்த ஒரு சுவையான செய்தி. பிள்ளையவர்களுக்குச் சிவதருமோத்தரம் முழுமையும் படிக்கவேண்டுமென்ற ஆசை. எங்கும் தேடியும் ஏடோ கிடைக்கவில்லை. ஒருநாள் திருவானைக்காவலில் உள்ள தேசிகர் ஒருவர் வீட்டில் சிவதருமோத்தர ஏடு இருப்பதாகச் செய்தி தெரிந்தது. பிள்ளையவர்கள் அதனை வாங்கி வரும்படி தம் மாணவர் ஒருவரை அனுப்பினார்கள். தேசிகரவர்கள் வந்த மாணவரிடம் தம்பி, இது பலபேருக்குப் பயன்படக்கூடிய புத்தகம். இந்தப் பக்கத்திலே தாய்தந்தையர்க்கு இறுதிக்கடன் செய்பவர்கள் அந்தப் பத்துநாளைக்குள் இதனை முழுமையும் படிப்பதோர் வழக்கம். அதற்காகப் பலர் இவ்வேட்டைப் பெற்றுப் போவார்கள். சிற்சில காலங்களில் பலர் ஒருசேரவந்து கேட்பதால் நான் வெளியில் கொடுக்க முடியாத சூழ்நிலையும் விளைவது உண்டு. அதனால் ஐயாவையே இங்கே வரச்சொல்லுங்கள்.

அவர்கள் படிக்க நானும் இருந்து பயனடைகின்றேன். ஐயாவை இங்கே நான் அழைப்பதற்காக வருத்தப்படவேண்டாமென்றும் தெரிவித்துக்கொள்ளுங்கள். புலவர் கோபம் பொல்லாதது அப்பா! என்னைத் தவருக அவர்கள் நினையாவண்ணம், தெரிவிப்பது உன் கடைமை என சொல்லியனுப்பினர்.

வந்த மாணவர்பிள்ளையிடம் இந்நிகழ்ச்சியைச் சென்று தெரிவித்தார். பிள்ளையவர்கள் கேட்டு மகிழ்ந்து ஆம், ஆம், பாருக்குப் பயன்படும் பொருளை சில நாளையேனும், ஒருவனே முடக்கிவைப்பது குற்றம்தானே;பூசைமுடித்துக்கொண்டு நானே நாளை காலையில் அங்கு வருவதாகச் சொல்லென்று அறிவித்தார்.

பிள்ளையவர்கள்மறுநாட்காலை அங்குச்சென்ருர்கள். இரண்டு மூன்று நாட்களில் தேசிகர் கேட்க, படித்துப் பாராட்டி மகிழ்ந்து வந்தார்கள். தேசிகர் அவர்கள் ஐயா அவர்கள் படித்துப் பயன் சொன்னமையால் பல நுட்பங்களை அறிந்து கொண்டேன் எனப் பாராட்டினர்.

பிள்ளை யவர்கள் நேற்றுவந்த மாணவனை நாளை அனுப்பி வைக்கிறேன். இவ்வேட்டை அவனிடம் கொடுத்து இங்கிருந்தே அவனை எழுதி முடிக்கச்செய்யுங்கள். உங்களுக்குச் சிரமம் இல்லாமல் விரைவில் எழுதி முடித்துவிடுவான்; அவனுடைய உணவு முதலிய செலவுக்காக இந்தச் சிறுதொகை தங்களிடமே இருக்கட்டும் என்று கூறி நூறு வெண்பொற்காசுகள் அளித்தாராம். மாணவரும் மறுநாள் முதல் விரைவில் எழுதி முடித்தார். இது பழைய வரலாறு. இவ்வாறு பிள்ளையவர்களே பெருமுயற்சி எடுத்து அருமையாகப் பெற்ற நூல் இங்கே பல படிகள் இருக்கின்றனவே; இது என்ன வியப்பு! இதனைக்குருமணியவர்களிடம் கேட்டுத்தெரியத்தான் வேண்டுமென்று ஐயரவர்கள் எண்ணியது மிகப் பொருத்தமே.

ஏடுதேடியதில் ஐயரவர்கட்குத்தருமையாதீன நூல் நிலையத்திலிருந்து சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு முதலிய அரிய நூல்கள் கிடைத்தன. ஐயரவர்கள் குருமகாசந்நிதானத்திடம் உத்தரவு பெறச்சென்றபோது (நூல்நிலையத்தில் சிவதருமோத்தரப் பிரதிகள் பலஇருக்கின்றனவே; அவைபெரும்பாலும் ஒன்றைப்பார்த்து ஒன்றை எழுதியதாய்க் காணப்படுகிறதே என்று கேட்டார்கள். மகாசந்நிதானம் அவர்கள், அதுவா நம்முடைய ஆதீன மரபில் தம்பிரான்கள் அனைவரும் சைவசமய நெறி, திருவிளையாடற் புராணம் முதலியவற்றைப் படித்து முடித்தவுடன் சிவதருமோத்தரம் முதலிய தொடக்க நூல்களைப் படிக்காமல் பெரியபுராணம்,

கந்தபுராணம், திருமுறைகள் சிவஞான சித்தியார் முதலியவற்றைப் படிக்கும்வழக்கமில்லை. ஆதலால் தம்பிரான்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரதி எழுதிப் படிப்பார்கள். அப்படி எழுதிப் படித்த படிகளில் நாம் பிறருக்கு வழங்கின போக எஞ்சியவை இத்துணை என்றார்கள்.

இதனால் சிவதருமோத்தரம் சைவநெறி தவறாது வொழுகும் தம்பிரான்களுக்கும், ஏனையோர்க்கும் உறுதியான உள்ளத்தை உதவும் உறுதுணை என்று ஏற்படுகின்றதல்லவா அந்நூல்

இன்றைய உலகும் பல்வேறு துறைகளில் பரபரந்து நடைபோடுவதால் சமயநெறிக்கேற்ற அறிவு நூல்கள் எவை என்பதையும் ஆராயாமல் கற்கவேண்டிய நூல்களைக் கற்காமல் கண்டது கற்கப்பண்டிதனவான் என்ற பழமொழிக்கேற்ப பரந்த மனப்பான்மையில் சென்று கொண்டுள்ளது.

இந்நிலையில் உலகின் தேவைக்கேற்பப் பரபரப்பிற்கு ஏற்ப சுருக்கமாக, விளக்கமாக, எளிய, இனிய தமிழ்நடையில் கருத்துக்களைக் காட்டினால் போதும்; கவிதை படிக்க நேரமில்லை என்பதைத் திருவுள்ளத்தடைத்தஸ்ரீலஸ்ரீசண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானசம்பந்தத்தில் இணைந்து வெளிவரச் செந்தமிழ்ச் சொக்கர் திருவருள் பணித்திருக்கிறார்.

இந்நூல் மறைஞானசம்பந்த நாயனாரால் அருளிச் செய்யப்பெற்றது. மறைஞான சம்பந்தர் என்ற பெயருடன் சைவ உலகத்திலே பலர் திகழுகின்றார்கள்: முதலிலே நம் உள்ளத்து உதிப்பவர் சந்தானசாரியர்களில் ஒருவராகிய மறைஞான சம்பந்தரே. அவர் உபதேச குருமூர்த்தியாக விளங்கினர் என்ற அளவில்தான் அறிய முடிகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு சிவசகஸ்ர நாமங்களுக்கு (பாடியம்) விரிவுரை ஒன்று வடமொழியில் எழுதியிருப்பதாகவும், அது சிவ சகஸ்ர நாம பாஷியம் என்ற பெயரில் வழங்குவதாகவும், தஞ்சை சரஸ்வதிமால் நிலையத்திலிருப்பதாகவும் செவி வழியாகத் தெரிந்ததுண்டு.

ஆதீனக் குருமுதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தர் காலத்தில் சிதம்பரத்தில் ஆன்மானந்த வாதத்தை நிறுவிய கண்கட்டி மறைஞான பண்டாரம் என்னும் பெயருடன் மறைஞான சம்பந்தர் ஒருவர் இருந்தார் என முத்தி நிச்சயப் பேருரை குறிப்பிடுகிறது. அவரே சைவ சமய நெறி பரமத

திமிர பானு, ஐக்கியலிங்கவியல் பசு, பதி, பாசப் பனுவல் முதலிய பல நூல்களை இயற்றினுரென்று முத்தி நிச்சயப் பேருரை மொழிகிறது. ஆனுல் அவர் செய்த நூல் வரிசையில் சிவதருமோத்தரத்தைக் குறிக்கவில்லை; அதனுல் சிவதருமோத்தரம் மறைஞானசம்பந்த நாயனுர் அவரோ அவரின் வேருனவரோ என்று துணியக்கூடவில்லை. இதனைப் பற்றிய ஆராய்ச்சியை இறுதியில் முயன்று பார்க்கலாம்.

இந்நூல் சந்தான சர்வோத்தரம் என்னும் மூலாகமத்தின் உபபேதமாகிய ஈசானம், சிவதன்மம், சிவதருமோத்தரம், திவ்யப்ரோத்தம், குபேரம், ஐந்துள் ஒன்ருகிய சிவதருமோத்தரத்தின் மொழி பெயர்ப்பாக அமைந்தது. பரமத தருமாதி இயல் முதலாக கோபுர இயல் ஈருகப் பன்னிரண்டு இயல்களையுடையது. ஆசிரியவிருத்தம் கலி விருத்தங்களால் ஆகியது. மாலை மாற்று முதலிய சொல்லணிகளாலும் விளங்குவது. சைவ ஒழுக்கங்களைத் தெளிவாக விளக்குவது. இத்தகைய சிறந்த நூல் இனி கட்டுரை வடிவில் ஞானசம்பந்தத்தில் இடம்பெறும்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பொன்மொழிகள்

இறைவன் திருவருள் இல்லையானுல் உலகம் இயங்காது. ஆண்டவனைப் பற்றிய எண்ணம் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழவேண்டும். நமக்குப் பெருங் கருணைத் தடங்கடலாகிய கடவுளிடத்திலே அன்பு வேண்டும். அப்படி அன்போடு எழுந்த அருள் மொழிகளே இன்று தோத்திரமாக உள்ளன; பன்னிரு திருமுறைகளாக உள்ளன.

* * * *

நிஷ்காமிய கருமத்தையும் கடந்த சிவ கருமமே நிருமலனுகிய சிவபெருமானின் திருவருளுக்கு நம்மை ஆளாக்கும்; குருவருளின் துணையே அதனைக் கூட்டி விடும்.

திருவருட்பயன் விளக்க உரை

(மலர் 30. இதழ் 12. பக்கம் 661 இன் தொடர்ச்சி)

5ஆம் அதி. அருளுரு நிலை

அஃதாவது அருள்பண்ணும் திருமேனியது இயல்பினைக் கூறும் அதிகாரம். அருள் உரு, வினைத்தொகை. 'அருளுதல்' என்றது, முதல்வன் செய்யும் ஐந்தொழில்களில் இறுதிக்கண்ணதாகச் சொல்லப்படுவதனை. 'அருளுரு' என்பதற்கு இவ்வாறன்றி, 'அருட்டிருமேனி' என உரைப்பின் அது படைத்தல் முதலியவற்றின் பொருட்டுக்கொள்ளும் திருமேனிகட்கும் பொதுவாமாதலின் இவ்வதிகாரப் பெயர்க்குச் சிறப்பாகாமையறிக' மேல், 'அருளை உணர்தல் உயிர்கட்கு இன்றியமையாதது. எனக்கூறி, இதனுள் அதனை உணருமாறு கூறலின், முன்னையதிகாரத்தோடு இயைபுடைத்தாயிற்று.

முதற்குறள்

" அறியாமை உண்ணின் றளித்ததே காணும்
குறியாகி நீங்காத கோ "

எனவரும்

இதன் பொருள் : காணும் குறியாகி நீங்காத கோ - பக்குவம், உற்றபொழுது கண்ணால் அறியத்தக்க பொருளாகி வெளிவந்து நீங்காது உடனாய் நிற்கின்ற அருள் தலைவன்; அறியாமை உள் நின்று அளித்ததே-பக்குவம் உறாதபொழுது எவ்வாற்றானும் அறியாதவாறு உயிர்க்குயிராய் உள்ளே மறைந்து உயிரினது அறிவைக் கொடுத்துவந்த பொருளே: பிறிதல்லன்.

விளக்க உரை : 'அப்பொருள் முதற் பொருள்' என்பது வெளிப்படை. " அறியாமை " என்றது எதிர்மறை வினையெச்சம். அளித்தல் - கொடுத்தல்; இங்கு வளர்த்தலின்மேற்று. அதற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. " குறி " என்றது, 'புலன்' என்றவாறு. " கோ " என்றது ஏற்புழிக் கோடலால் அருள் தலைவனைக் குறித்தது. அருள் தலைவனுவான், திருவருளைத் தெளிய உணர்த்தும் தலைவன். இவனே 'ஞானாசிரியன்' எனப் படுவன் என்க. இவனை, 'காணும் குறியாகி நீங்கான்' என்றதனால், 'அங்ஙனம் தோன்றி வந்து உடனின்று உணர்த்தித் தெளிவித்தாலல்லது உயிர்கள் திருவருளைத் தெளியமாட்டா'

என்பது பெறப்பட்டது. 'பொருள்' என்பது இருதிணைக்கும் பொதுவாதலின், "அளித்தது" என்பது, 'அளித்த பொருள்' என்னும் பொருட்டாய், "கோ" என்பதனோடு இயைந்தது. ஏகாரம், தேற்றம்.

இதனால் 'திருவருளை உணர்த்தும் ஞானாசிரியன் சிவமே' என்பது கூறப்பட்டது.

"குருவே சிவம்எனக் கூறினன் நந்தி"†

"தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த"*

என்பவற்றைக் காண்க.

இரண்டாவது குறள்,

"அகத்துறுநோ யுள்ளின ரன்றி யதனைச்
சகத்தவருங் காண்பரோ தாம்"

எனவரும்.

இதன்பொருள்: அகத்து உறு நோய் இல்லத்தில் உள்ளார்க்கு உற்ற நோயினது நிலையை; உள்ளினர் அன்றி - இல்லத்தினுள் உறைபவர் அறிதலன்றி; அதனைச் சகத்தவரும் காண்பரோ - அதனை வெளியில் உள்ள பிறர் அறிவரோ; அறியார்.

விளக்க உரை: 'அதுபோல உயிரின் அகத்துப் பொருந்தி நிற்கும் அறிவுப்பிணியாகிய அறியாமை நிலையை உயிர்க்குயிராய் அதனுள் நிற்கின்ற முதல்வன் அறிதலன்றிப் பிறர் அறிய வல்லுநரல்லர்' என்னும்பொருள்தோன்ற நிற்றலின் இது பிறிதுமொழிதல் அணி. 'அறியாமை தேயாத பொழுது அருளை உணர்த்துதலும் குற்றம்; அது தேய்ந்தபின் உணர்த்தாமையும் குற்றம்; ஆதலால் அறியாமை தோய்ந்த நிலையை உணர்ந்து வந்து அதனை உணர்த்தும் ஞானாசிரியன், உயிர்க்குயிராய் நிற்கும் சிவனேயன்றி பிறன் அல்லன்' என்பதாம். தாம், அசைநிலை.

நிரம்ப அழகிய தேசிகர்: 'நோய்க்கு' என்பது உருபு மயக்கம் என உரையாமையாலும், 'அறியவல்லரோதாம்' என பொருள் உரைத்தமையானும், 'நோய்க்கு, தான்' என்பன பாடம் ஆகாமை யறிக.

---

† திருமந்திரம் 6ம் தந்திரம். * சிவஞானபோதம் சூ. 8.

இதனால், 'ஞானகுரு சிவமேயாதல் பொருந்துமாறு பற்றித் தெரிவிக்கப்பட்டது.

மூன்றாவது குறள்

"அருளா வகையா லருள்புரிய வந்த
பொருளா வறியா புவி"

எனவரும்.

இதன் பொருள்: அருளா வகையால் அருள் புரிய வந்த பொருளா – நேர்நின்று அருளாமல் குருவடிவில் மறைந்து நின்று அருள் புரிய நினைத்துவந்த முதற் பொருளாக; புவி அறியா - ஞான குருவை உலகம் உணரமாட்டாது.

விளக்க உரை: நிரம்ப அழகிய தேசிகர் கொண்ட பாடம் இதுவே, என்பதனை அவரது உரைநோக்கி அறிக. 'ஞான குருவை' என்பது அதிகாரத்தால் வந்தது. 'அறியாது' என்பது ஈறு தொகுத்தலாயிற்று. 'பொருள் ஆர் அறிவார் புவி' என்பது பாடமாயின். 'பொருள்' என்பதற்கு, 'கருத்து' என உரைக்க. கருத்தாவது, 'உண்மை வடிவில் தோன்றின் மக்கட் பிறப்பினராய மாணாக்கர் அஞ்சி யகல்வர்' எனக் கருது தல். இக்கருத்து இங்குக் கொண்ட பாடத்தில் உடம்பொடு புணர்த்தலால் பெறப்பட்டது. இக்கருத்தினால் குருவடிவில் மறைந்து நின்று அருளுதலையே, "மானைக் காட்டி மானைப் பிடித்தல். என்பர். இவ்வுவமை இனி இவ்வதிகாரத்துள்ளும் கூறப்படுதல்' காண்க. 'இறைவன் தனது உண்மை வடிவில் தோன்றின் மக்கள் அதனைக் காணவும், அணுகவும் மாட்டாது அஞ்சி யகல்வர்' என்பதனை நக்கீரர்,

"அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி"*

என்பதனால் குறித்தார்.

"கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும் —
மெய்கண்டான்" [வெண்ணெய்நல்லூர்.

என்பது முதலியவற்றான் அறிக

இதனால், 'ஞானாசிரியன் சிவமேயாதல் சத்திநிபாதர்க்கன்றி விளங்காது' என்பது கூறப்பட்டது. (தொடரும்)

---

* திருமுருகாற்றுப்படை – 289, 90. * இருபா இருபஃது 1.

உ

சிவமயம்

பொங்கல் வாழ்த்து

(வி. சா. கு.)

வானம் பொழிந்து மழைவளம் தந்தது
வையகம் செழித்து வளம்பல நிறைந்தது
செந்நெற் பயிர்களும் வாழையும் கமுகும்
இஞ்சியும் மஞ்சளும் கரும்பும் பிறவும்
தழைத்து வளர்ந்து தந்தன பயன்கள்
இறைவன் அருளால் இப்புவி மக்கள்
பல்வகை வளங்களும் பாங்குறப் பெற்றனர்.
போரும் அச்சமும் பொல்லா வறுமையும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
உலகில் அமைதி ஒற்றுமை வளர்ந்து
வாழ்ந்திட இறைவனை வாழ்த்தி வேண்டி
பொங்கல் விழாவில் போற்றிக் களிப்போம்.

இளைய ஒளி

அறப்பணிச்செல்வர்,

திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை, M. B., B. S.,

பொதிகைத் தமிழ்ப்பண் போற்றி இசைக்க
மதிவளர் சான்ருேர் மாமறை ஓத
வேதியர் வேதம் விண்ணை எட்டிட
சாதியே தங்கள் சமரசம் எய்திட
வாதில் வித்தகர் வாடினுர் துணைவர்
பாவிரித் தோதும் பைந்தமிழ்ப் புலவர்
திருமுறை கற்றுத் தெளிந்தவர் தருமையில்
இளஞ்சுடர் போலப் பீடம் ஏற்ருர்.
சென்னையில் சமயத் தொண்டுகள் செய்தவர்
தமிழகம் எங்கணும் சைவம் தழைக்கப்
பணிபல புரிந்தவர் திருவா ரூரில்
அப்பர் கோயிலை அழகுறக் கண்டவர்,
கயிலைக் குருமணி இழப்பை நீக்கிடக்
கண்மணி போல வந்தவர், அடியவர்
ஒருமனதாக ஏற்றிடு உத்தமர்,
தருமையின் சிறப்பு தழைத்திட வந்தார்.
சிவனை நினைந்தவர் சிறப்புற் றிருப்பர்
என்னும் மொழிதனை மெய்ப்பிப் பதுபோல்
இறைவன் தொண்டரை எழிற்குரு வாக்கினன்
தருமையம் பதியின் தனிமுதற் குருவாய்
சண்முக தேசிக ஞானசம் பந்தர்
என்னும் பெயரொடு பட்டம் பெற்ருர்.
குருவிடம் குறைவிலா பக்தி கொண்டவர்
குவலயம் போற்ற விளங்குவர் என்பதை
இவர்தம் அனுபவம் எடுத்துரைக் கின்றது.
குன்றின்மேல் விளக்காய்க் குன்ருச் சுடராய்
என்றும் வாழ்க வாழ்க என்றே
இறையடி தொழுது ஏத்து கின்ருேம்.
மண்ணும் விண்ணும் மகிழ்ந்தினி தேத்த
பயிர்க்கு மழையாய்ப் பலாவில் சுவையாய்
கண்ணில் ஒளியாய் கருத்தின் நிறைவாய்
விளங்கிப் பொலிந்து வியந்து போற்றிட
குருமணி வாழ்க குவலயம் வாழ்கவே.

தான்யலக்ஷ்மி

சகலசெல் வங்களுந் தரும்இமய கிரிராச
தனயைமா தேவி ! நின்னைச்
சத்யமாய் நித்யமுள் ளத்தில்து திக்குமுத்
தமருக்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதனந் தான்யம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி
ஆகுநல் லூழ்நு கர்ச்சி
தொகைதரும் பதினாறு பேறுந்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப் பாய்;
சுகிர்தகுண சாலி!பரி பாலி!அநு கூலி!திரி
சூலி!மங் களவி சாலி!
மகவுநான் ; நீதாய் அளிக்கொ ணாதோ?மகிமை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுப நேமி!புகழ் நாமி!சிவ சாமிமகிழ்
வாமி!அபி ராமி! உமையே!

— அபிராமியம்மை பதிகம்.

உயிரைத் தியாகம்செய்து உடலைத் தியாகஞ்செய்து
உயிரெனவே இந்தியத்தாய் நாடதனைக் காத்திட்ட



செயற்கரிய செயல்செய்த தீரமிகு வீரர்கட்கு
நயப்புறவே நந்தருமை ஆதீனம் அளித்திட்ட
நயமிக்க நன்கொடையாம் இருபத்தை யாயிரத்தை
பயபக்தி யுடன்அளிக்கப் பெறுகின்ற நம்முதல்வர்.

உ

குருபாதம்

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருவாரூரில் 26-12-71இல் நிகழ்ந்த தேசியப் பாதுகாப்பு நிதிவழங்கு விழாவில்

தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு,

டாக்டர், கலைஞர், மு. கருணாநிதி அவர்களிடம்

தருமையாதீனச் சார்பில்

ரூபாய் 25,001-க்குக் காசோலை வழங்கி, வாழ்த்தியருளிய

ஆசியுரை

சகோதர நாடாகிய பாகிஸ்தான் தவறான எண்ணத்தால் விளைவித்த 'பங்களாதேஷ்' உரிமைப்போரில், நாம் விரும்பாமலேயே, மனிதாபிமான உணர்ச்சியின் அடிப்படையில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுவதாயிற்று. இது முற்றி, நமது கிழக்கு எல்லையிலும், மேற்கு எல்லையிலும் தீவிரமடைந்து பல்லாயிரம் மக்களுக்கும் பெருந்தீங்கு விளைத்தது.

நமது நாட்டின் பெருமையைப் பெரிதும் உயர்த்தக்கூடிய நிலையில், நம் முப்படை வீரர்களும் ஒன்றுபட்டு உறுதியாக நின்று இதுவரை வரலாறு காணாத ஒரு மாபெரும் வெற்றியைப் பதினான்கே நாட்களில் வாங்கித்தந்து, சுதந்திர வங்காள தேசத்தை உருவாக்க உதவியிருக்கிறார்கள். இப்பெருமை கிடைக்கக் காரணமாக இருந்த நம் வீரர்களில் பல்லாயிரவர், நமக்காகவும், நம் தாய் நாட்டிற்காகவும் உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள்; பல்லாயிரவர் உடலைத் தியாகம் செய்து ஊனமடைந்துள்ளார்கள்; பல்லாயிரவர் தாமிருந்த ஊரையும், நாட்டையும், உற்றார் உறவினரையும் தியாகம் செய்து அன்னியரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளார்கள்.

தியாகம் செய்த வீரர்களின் குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் இந்திய நாட்டிற் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. நிதி மிகுந்தவர் பொற்குவை யாக, நிதி குறைந்தவர் காசுகளாக, ஆண்மையாளர் உழைப்பாக, எதுவும் அற்றவர் வாய்ச்சொல்லாகத் தியாகம் செய்ய முன் வரவேண்டும்.

அயிராவணத்தையும், அமரர் நாட்டையும் தியாகம் செய்து, ஆருயிர்களை மதித்து, அடல் விடை ஏறும் அண்ணல், த்யாகராசப்பெருமான் வீற்றிருக்கும் தியாகத்தலமாகிய திருவாரூரில், ஒவ்வொருவரும் தியாகம் செய்ய வேண்டு மென்பதற்கு எடுத்துக்காட்டாகத், தியாகராசர் தந்த கலைஞர் கருணாநிதியின் கரத்தில் நம்முடைய தியாகத்தைப் பொன்னாகவும் பொருளாகவும் வழங்கத் திருவருள் கூட்டியிருப்பது மிக்க பொருத்தமுடையதாக அமைந்திருக்கிறது.

தெய்வ பக்தியையும், தேசபக்தியையும் இருகண்ணெனப் போற்றியவர்கள் தருமையாதீன மகாசந்நிதானங்கள். தருமை யாதீனக் குருமணிகளின் புனித வரிசையில் 25-வது குருமணியாக, சைவமும்-தமிழும் தழைக்க அருளாட்சி புரிந்து, சமீபத்தில் காசித் தலத்தில் முத்திப்பேறெய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நி தானத்தின் நினைவாக, நமது ஆதீனத்தின் சார்பில் ரூபாய் 25,001க்கும், ஆதீனப்பணியாளர்கள் சார்பில் ரூபாய் 2,501க்கும் உரிய காசோலைகள் இத்துடன் வழங்கப்பட்டிருக்கின்றன.

தமிழக முதல்வர் மேற்கொண்டிருக்கின்ற நல்லறப்பணிக்கு நம் தமிழ்மக்கள் பல்லாற்றானும் உதவி, தமிழகத்தின் நன்றி உணர்வைப் பலப்படுத்துவார்கள் என்பது உறுதி. போரில் நாம் மாபெரும் வெற்றி அடைந்திருப்பதுபோல், போருக்குத் துணைநின்ற போர் வீரர்களின் குடும்பங்களின் நல்வாழ்விற்குப் பெருந்தொகை வழங்குவதிலேயும் வெற்றிபெற்றுத் தமிழ் மக்க ளின் பெருமையை நிலைநாட்டிக்கொள்வது இன்றியமையாதது.

இவ்வறப்பணி எல்லா வகையிலும் சிறக்கச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்
பரிபூரணம் ஆன பத்தாம்நாட் குருபூசை விழாவில்

தருமையாதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்
குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்
காஞ்சிபுரம் தொண்டைமண்டலாதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்.
திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் இளவரசு
வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகளும்

தருமையாதீனர் ஸ்ரீ ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்
பரிபூரணம் ஆன பத்தாம் நாட்குருபூஜை விழாவில்

தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்
குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகளும் அன்பர்களும்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணம் ஆன பத்தாம்நாள் குருபூஜை வழிபாட்டிற்குப் பின்னர்

தருமையாதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தென்னம்பிள்ளை நடுதல்.

தருமையாதீனம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி பரிபூரணம் ஆன
பத்தாம்நாட் குருபூஜை விழாவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள், பெருமக்கள் புடைசூழப் பட்டணப்பிரவேசமாக
எழுந்தருளல்.

திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

(மலர் 31. இதழ் 1. பக்கம் 190 இன் தொடர்ச்சி)

சொல்லரிய பூரணமாய்த் திருவுரு
யருவாய்ச்சிற் சொரூப மாகிப்
புல்லறிவி னோர்க்கரிதாய் ஐம்பொறியான்
மதிமருட்டும் புலனை வென்ற
வல்லறிஞ ரிதயமக லாவொளியாய்
ஐயாற்றுள் வயங்கு(ம்) தேவே
வெல்லரிய பவக்கடலிற் சுழலுமியா
னடைவ தென்றுன் விறற்பொற்றாளே. (27)

(இ - ள்) சொல் அரிய பூரணம் ஆய் - கூறற்கு முடியாத நிறை பொருள் ஆகி, திருஉருஆய் - அழகிய வடிவப் பொருளாகி (சுந்தரவடிவமாகி) சித் சொரூபம் ஆகி அருஆய் - ஞானவடிவப் பொருளாகி காணற்குஅரிய அருவப்பொருளாகியும், புல் அறிவினோர்க்கு அரிதுஆய் - தாழ்ந்த (இழிந்த) அறிவினையுடையவர்கட்கு அறிதற்கு அரிய பொருள் ஆகியும், ஐம்பொறியால் மதிமருட்டும் புலனைவென்றவல் அறிஞர் இதயம் அகலா(த) ஒளிஆய - ஐந்துபொறிகளால் அறிவைமயங்குறச் செய்யும் ஐந்து புலன்களையும் வென்ற வலிய (உறுதியான) உளக் கோயிலினின்றும் நீங்காத (விட்டுவிலகாத) ஒளியுருவமாகியும், ஐயாற்றுள் வயங்கும் தேவே - திருவையாற்றின்கண் விளங்க வீற்றிருக்குந் தெய்வமே, வெல் அரிய - வெல்வதற்கு முடியாத, பவ(ம்) கடலின் சுழலும்யான் - பிறவிப்பெருங்கடலின் கண் சுழற்சியுறும் அடியனேன், உன்விறல் பொன்தாள் - தேவரீருடைய (பிறவிக்கடல் கடத்தற்குரிய புணையாகிய) வலிய அழகிய திருவடிகளை, அடைவது என்று - சேர்ந்தின்புறுவது எக்காலமோ? (எ - று)

(கு - ரை) வாக்கு இறந்த பூரணமே சொல்ல அரிய பூரணம் எனப்பட்டது. அகரம் தொகுத்தல் விகாரம். திருஉரு - முத்தியளிக்கும் அருள் வடிவம். சிற்சொரூபம் - ஞானவடிவம், அரிது இன்மைமேற்று; காண முடியாதது. பொறிவாயில் ஐந்தவித்த புண்ணியனை நண்ணுமவர் ஐம்புலனையும்பற்றி ஐந்தவாவினையும் அறவே களைந்தவராவர். அறிஞர் இதயம் - ஞானத்தினையுடைய பெரியார் மனமாகிய தாமரை. ஒளி - சோதி, அருட்பெருஞ்சோதி, திருவையாறு அகலாத செம்பொன் சோதியாகும். வயங்கும் - விளங்கும். சுழலல் - சுற்றிக்கிடத்தல். விறல் - வன்மை. என்று - எந்தக்காலம். பவம் கடல் - பிறவிப் பெரும்கடல். செம்மலர்நோன்ருள் - விறல்பொற்ருள் என்பதும் ஒன்றேயாம்.

பொற்பிலங்கு மாமறையின் உட்பொருளே
யுயிர்க்குயிராப் பொருந்தி நின்ற
தற்பரமே நாயேனைத் தடுத்தடிமை
கொண்டருளுந் தனிப்பே ரன்பே
கற்புயரம் பிகைமகிழுங் கண்ணுதலே
மான்முதலோர் கருதா நிற்கும்
சிற்பரமே பஞ்சநதி வாழும்முக்கட்
செஞ்சுடரே செல்வக் குன்றே (28)

(இ - ள்) பொற்பு இலங்கு மாமறையின் உள்பொருள் ஏ - அழகுற்று விளங்குகின்ற பெருமை வாய்ந்த வேதங்களின் உள் பொருள் ஆகிய ஞானப்பொருளே, உயிர்க்கு உயிர் ஆய் பொருந்திநின்ற தற்பரம் ஏ - உயிர்கட்கு உயிராய் இயைந்து நின்ற தற்பரம் ஆனவரே (மிகமேலானவரே) கற்பு உயர் அம்பிகை மகிழும் கண்ணுதல் ஏ - உலகின்கண் உயிர்கள் கற்பு உயர்தற்கு ஏதுவாகிய உமாதேவியாகிய அறம்வளர்த்த அன்னையார் அகமிக மகிழ்ச்சியுறும் நுதல் விழிநாட்டத்து இறையவரே!, மால்முதலோர் கருதா நிற்கும் சிற்பரம் ஏ - மகாவிட்டுணு முதலிய தேவர்கள் இடைவிடாது எண்ணித் துதிக்கும் ஞானபரம்பொருளாகியுள்ளவரே. செல்வம் குன்று ஏ - அருட்செல்வமாகிய திருமலையாகியுள்ளவரே (உருவகம்). பஞ்சநதி வாழும் முக்கண்சுடரே - திருவையாற்றில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள மூன்று கண்களையுடைய செம்பொற்சோதி ஈச்சுரரே, தனி பேர் அன்பு ஏ - ஒப்பற்ற பெரிய அன்புருவமானவரே. நாயேனை தடுத்து அடிமை கொண்டு அருளும் - இழிந்த நாயினும் கடைப்பட்டவனுகிய எளியேனைப் பிறவிக்கடலின் விழ்ந்து ஆழ்ந்தே போகாதவாறு நல்வழிப்படுத்துவான் தடுத்து அடிமைகொண்டு அருளுவீராக. (எ - று)

(கு. ரை) 'அன்பே சிவம், என்பர் திருமூலர். தனிப் பேரன்பே என்றார். மாமறை - தெய்விகத்தன்மை பொருந்திய மகாமந்திரங்களைத் தன்னகத்தே கொண்ட வேதங்கள். உயிர்க்கு உயிர் - தோன்றாத்துணைக்கோர் துணையாகி சிவனுக்கு சிவனாகி யுள்ள நிலைமை. பொற்பு - பொலிவு (அழகு). தடுத்து - ஆழ்ந்து சிக்கிக்கொண்டு விடாதவாறு விலக்கி. கற்பு - பிறர்நெஞ்சு புகாமை, கற்பித்த வாறொழுகல். கண்நுதல் - நுதல்கண், அழல்வடிவான கண். மால் - தன்னை வணங்காதவர்க்கு மயக்கங் கொடுப்பவர். கரியவர் எனலுமாம். கருதாநிற்றல்: நின்னையன்றி வேறொருதெய்வமின்றென்றுதஞ்சமாக நின்றொழுகுதல். சிற்பரம் (சித்பரம்) ஞானவுருவம். செஞ்சுடர்: செம்பொன்சோதியென வொருதிருப்பெயர் உளதெனலை வற்புறுத்தவே செஞ்சுடர் என்றார். அளித்துப்பெருஞ் செல்வமாக்கும் இறையாகலின் செல்வக்குன்றென்றார்.

குன்றனைய கொள்கைமட மங்கையர்கள்
மோகமயர் குரவை மூழ்கா(து)
என்றனைநின் றாட்புணைதந் தாள்வதென்றோ!
கல்லோல மில்லா நீர்போல்
ஒன்றியசை வின்றியுளத் தெளிவுடைய
வடியார்கள் உணர்வி னூடே
நின்றளவி லானந்தமுதவுமெழில்
ஐயாற்றுள் நிறைந்த தேவே"

(இ-ள்) கல்லோலம் இல்லா (த) நீர்போல் ஒன்றி அசைவு இன்றி: அலைகள் இல்லாத நீரினைப்போல் - (தெளிவுற்ற தண்ணீரைப்போல) பொருந்தி அசைவு இல்லாமல் (ஒரு பெற்றியாயமைந்து) உள்ளம் தெளிவு உடைய அடியார்கள் மனத்தெளிவுற்ற தொண்டர்தம், உணர்வு இன் ஊடு: அறிவி னிடத்து, நின்று நிலைத்து, (அறிவால் மன்னி) அளவு இல் ஆனந்தம் உதவும்: எல்லையற்ற பேரானந்தத்தைஅளித்தருளும், எழில் ஐயாற்றுள் நிறைந்த தேவே - அழகுடன் அமர்ந்த திருவையாற்றுப்பெரும் பதியின்கண் எழுந்தருளியுள்ள பரிபூரணமான தெய்வமே (சிவபரம்பொருளே) குன்று அனைய கொங்கைமட மங்கையர்கள் - மலைநிகர்த்த கொங்கைகளையுடைய இளைய பெண்களுடைய, மோகமயல் குரவை மூழ்காது - ஆசை யெனும் மயக்கமாகிய குரவைக் கூத்தினிடத்து, அமிழ்ந்து முழ்கிப்போகாதபடி, என்தனை - அடியேனை. நின்தாள் புணை தந்து ஆள்வது என்று ஓ - தேவரீர்தம் திருவடிகளாகிய தெப் பத்தினைக் கொடுத்து. ஆண்டருளுவது எக்காலம் ஓ. அறியகில் லேன். விரைந்து அருள்புரியல் வேண்டும் (என்பதாம்)

(கு-ரை) ஊனினுள் உயிரைவாட்டி உணர்வினர்க்குஎளியர் ஆகிய வால்அறிஞருகிய பரம்பொருளை யோகமுதிர்வால் காண முருகிய அறிவுடையவரே, தொண்டர் என்பார் உளத்தெளி வுடைய அடியவர் என்ருர். உணர்வினின் ஊடுநின்று அளவு இல் ஆனந்தம் - பேரின்ப வாழ்வு ஆம் இன்பம். "அறிவினில் அறிவான் மன்னி அம்மையோடு அப்பனுகி. செறிவு ஒழியாது நின்ற சிவன் என்பது சிவஞானசித்தியார். கல்லோலம்-அலைகள். தாள்புணை-உருவகம்; தாளாகிய புணை ஓகாரம்வினைப்பொருட்டு 'எல்லா உலகமும் ஆனுய் நீயே' அப்பர் திருவாக்காகலின் ஐயாற்றுள் நிறைந்த தேவே எனப்பட்டது. நின்று-நிலைபெற்று "ஒன்றிநினைமின்கள் உந்தமக்கு ஊனம் இல்லை" என்பது திருவிருத்தம். ஒன்றுதல் - பிரிவின்றிப் பொருந்துதல். தெளிவு - சிவபரம் பொருளினையன்றி வேறொரு தெய்வம் இல்லை யெனும் உறுதிப்பாடு. ஆள்வது—ஆணவமலவலிதொலைத்து முனைப்பு ஒழித்து அடிமைப்படுத்துவது" தேவே, என்பதில் ஏகாரம் விளியாம்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi.

இன்று இரவு, சென்னைத் தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தின் அன்பர்குழுவுடன், சீர்காழி சட்டைநாதசுவாமி கோயிலுக்கு வந்து தரிசித்து மகிழும் பேறு கிடைத்தது. திருக்கடவூர் தரிசித்துச் சீர்காழிக்கு வரும் வழியில் உந்தூர்திக்கு முறிவு ஏற்பட்டு. இடையிற் சிறிது நேரம் என்ன செய்வது என்று தெரியாமல் அன்பர்கள் திகைத்து நின்றபொழுது, கண்காணிப்பாளர் திரு. சௌரிராஜன் அவர்கள், செய்தி அறிந்து தாமே ஒருதனி உந்தூர்தியை மிக விரைந்து ஏற்பாடு செய்து, எங்களைக் கோயிலுக்கு வரவழைத்து மிகவும் நல்லமுறையில் ஆலயதரிசனம் செய்வித்தும், சிறந்த உணவுக்கு ஏற்பாடுகள் புரிந்தும், காட்டிய பேரன்பின் திறனும், சமயோசிதத் திறமையான உதவி ஏற்பாடுகளும் பெரிதும் வியந்து போற்றத்தக்கவை. ஆலயப்பணியாளர்கள் காட்டிய பரிவும், அன்பும் எங்களைப் பெரிதும் மகிழ்வித்தன. எல்லா வற்றிற்கும் காரணமான திருவருளும், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணையும், என்றும் புகழ்ந்து நன்றி பாராட்டுதற்குரியன.

இங்ஙனம்

தருமையாதீன சமயப்பிரசார நிலைய

5—12—71. அன்பர்களின் சார்பில்,

ந. ரா. முருகவேள்.

இருவகைப் புணர்ச்சியில் : :
: எழுத்துப்பேறும் சாரியையும்

டாக்டர். திரு. சோ. ந. கந்தசாமி M A.,M. Litt.Ph.D.

(மலர் 31, இதழ் 1, பக்கம் 48 - இன் தொடர்ச்சி)

எழுத்துப்பேறு :

இனி, இருவகைப் புணர்ச்சிக்கும் பயன்படும் எழுத்துப் பேற்றினைத் தொல்காப்பியர் சுட்டிச் செல்லும் இடங்களைத் தொகுத்து நோக்கின், அவற்றின் பல்வேறு பணிகள் புலனாகும்.

I அகரப்பேறு :

1. அகரம் - எழுத்துப்பேறு :

நெடுமுதல் குறுகும் பெயர்களாகிய தம், நம், எம், நும், தன், என், இன், நின் என்பன ஓர் அகரம் பெற்று நான்கன், ஆறன் உருபுகளுடன் புணரும் (தொல். எழுத்து. 115, 161, 162).

'ஈருகு புள்ளி அகரமொடு நிலையும்' என்ற தொடர்க்கு நச்சினார்க்கினியர், 'ஓர் அகரஎழுத்துப்பேறு நிலைமொழிக்கண் வருதல் உளதாகக் கருதினராதலின்' என உரை வகுத்து, 'நினவ கூறுவல் எனவ கேண்மதி' (புறம்) எனச் சான்றும் நல்கினர். பிறுண்டு, 'சாரியை பெறவே அகரம் வீழ்ந்தது' (தொல். எழுத்து. 230) என எழுதுவராதலின், சாரியையின் வேறாய் 'அகரம்' வழங்கிற்று எனலாம்.

2. அகரம் - அளபெடையில் வருதல் :

வேற்றுமைப் புணர்ச்சியில் பலா, கா, மா என்பன போன்ற ஆகார ஈற்றுச் சொற்களும், உம்மைத் தொகையில் வரும் ஆகார ஈற்று நிலைமொழியும் அகரம் பெறும் என்கிறார்.
(தொல். எழுத்து. 223, 226, 231).

எ-டு.	பலாஅக் கோடு	உவாஅப் பதினன்கு
	காஅக் குறை	இராஅப் பகல்
	மாஅங் கோடு	

இத்தொடர்களில் இடையறவு படாமல் ஒலித்தற்கு, நிலைமொழியிற்று ஆகாரம் அளபெடுத்து நின்றதெனக் கருதலாம். இத்தகைய அகரப் பேற்றினைப் பவணந்தியார் பகர்ந்திலர்.

3. மிகைத்திருத்தத்தில் (Hyper-Urbanisation) வரும் அகரம் :

'பல்லவை நுதலிய அகர இறுபெயர்' (தொல். எழுத்து. 174), 'பலவற்றிறுதி' (தொல். எழுத்து. 213) என்ற தொடர்கள் குறிக்கும் சொற்கள் யாவை என்பதைச் சொல்லதிகாரத்தில் (168 நூற்பா) விளங்க உணர்த்தினர். அவற்றுள், 'பலவும் சிலவும்' என வரற்பாலன, 'பலாஅஞ் சிலாஅம்' எனவரும் (தொல். எழுத்து, 213). ஈண்டு அவு(ம்)▷ ஆஅ(ம்) ஆகக் காண்கிறோம். எனின், 234-ம் நூற்பாவில், ஆ▷ அவு ஆகும் என்றார்.

எ-டு. புரு ▷ புறவு, நிலா ▷ நிலவு, குரா ▷ குரவு ஆ ▷ அவு ஆதலான், அவு ▷ ஆ ஆதல் கூடுமெனக் கருதிப் பலவும் சிலவும் ▷ பலாஅம் சிலாஅம் என நீண்டொலித்து அகரம் இசை நிறைத்தது எனக் கருதினராதல் வேண்டும். இம்மொழிப் போக்கினை, Hyper Urbanisation அல்லது over-correction என்பர். இம் மிகைத்திருத்தம் நன்னூலார் காலத்தில் வழக்கு வீழ்ந்தது போலும் (நன். உயிர். 170).

4. அகரம் எழுத்துச் சாரியை :

காரம் காரை, கரம், கான் முதலிய எழுத்தின் சாரியை என்றார் தொல்காப்பியர் (தொல். எழுத்து. 134). அவரே 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் (46) என்று அகரத்தினையும் எழுத்துச் சாரியையென உடப்பொடு புணர்த்தனர். நன்னூலார் வழி மொழிந்தனர் (நன். எழுத்து. 126).

5. அகரம்-அசைநிலை :

தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில்,

'குஐ ஆன் என வரூஉம் இறுதி
அவ்வொடுஞ் சிவணும் செய்யுள் உள்ளே' (108)

என ஓர் அகரம் வருதலை அமைத்துள்ளார். 'கு' வுடன் அகரம் புணர்தலை,

'வரைநிலை யின்றே ஆசிரியர்க்க' (தொல். புள்ளி. 315)
'கடிநிலை யின்றே ஆசிரியர்க்க' (,, 389)

என அவரே ஆண்டுள்ளார். ஆன் அகரத்துடன் புணர்தலை, 'இறுதியான' (தொல். தொகை. 145), 'வழக்கத்தான' (உயிர். 246, 270; புள்ளி 312; குற்றி. 457), 'செய்யுளான' (புள்ளி. 316), 'தொடரியலான' (புள்ளி. 356), 'காலையான' (புள்ளி. 399), 'மொழிவயினை' (குற்றி. 417), 'அல்வழியான' (குற்றி 423, 437), ஆவயினை (குற்றி. 455) 'பொருள்வயினை' (குற்றி. 481) என எழுத்ததிகாரத்திலேயே ஆண்டுள்ளார். 'ஐ'யுடன் அகரம்புணரின் 'ஐய' என்றாகும். இவ்விதிக்கு ஏற்ற இலக்கிய மேற்கோள் இல்லையாதலின், இவ்விதியின்பொருண்மை தெரிதல் அரிதாம். தொன்னூல் வழிவந்த நன்னூல், 'ஐயான் குச் செய்யுட்கு அவ்வுமாம்' (318) எனப் பழமை பாராட்டியது. இந்நூற்பா 'சிலவேற்றுமை உருபு செய்யுட்கண் திரிந்து வரினும் அமையுமெனப் புறனடை உணர்த்துதல் நுதலிற்று' என விளக்கிய சங்கர நமச்சிவாயர், "ஆனும் குவ்வும் திரிந்துழி அவற்றின் முன்னின்ற ஆனும் குவ்வும் சாரியை என்பது பெற்றும்' என எழுதுதல் விளக்கமாயில்லை. 'ஆன் உருபும் குவ்வுருவும் அகரத்தின்கண்ணுகவும் பெறும்' எனப்பின்னர் நேர்பட உரைத்தனர்.

ஆசிரியற்க, வழக்கத்தான எனவரும் சொற்களில் உருபினைச் சார்ந்து நிற்கும் அகரம் சாரியை யாதல் இன்று. என்னை? உருபின் வழித்தாய்ச் சாரியை தோன்றும் என யாண்டும் கேட்கப்படாமையின் என்க. பின், அசைநிலை என்று கோடலே ஏற்புடைத்து. இங்ஙனம், சொல்லின் இறுதியில் தேவையின்றி நிற்கும் உறுப்புக்களை அசைநிலை எனக்கூறுதல் இலக்கிய உரைகளில் காணலாம். நச்சினார்க்கினியர், தன்வழிய காளை (சிந்தா. 494), ஆளிய மொய்ம்பன் (517), திருவமேகலை (530), கன்னிய மகளிர் (1203, 1861) குழவிய முல்லை (1267) எனவரும் சொற்களில் அகரத்தினை அசைநிலை என்றே விளக்கினர். இனி, அளப்பரியவை, தாள் இணையவை, கடவுளவை (பரி. 4: 61-3), பசுந்துளவினவை, கருங்குன்றனையவை, ஒள்ளொளியவை, ஒருகுழையவை, பொலங்கொடியவை, வளைநாஞ்சிலவை, தண்டேந்தினவை, நேமியவை, அம்பினவை, புகர்வாளவை (பரி. 15:54-61) எனவரும் சொற்களில் விகுதிப்புணர்ச்சிக்கண் நின்ற 'அகரத்தினை' நன்னூலார்போல் சாரியை எனக் கருதாமல் இசைநிறையும் இடைச்சொல் என்றே பரிமேலழகர் இயம்பினர்.

6. அகரம்-ஆறன்பொருள்பயத்தல் :

'ஆ'வின் முன் இன் சாரியை வருங்கால், இகரம் கெட்டு 'ஆன்' என நிற்கும் (தொல். எழுத்து 120 ; 231). இன்சாரியை பெற்ற பின்னரும் ஓர் அகரம் பெறும் என விதித்தார் (232). 'ஆனநெய்' 'ஆனமணி' என மேற்கோள் காட்டினர் உரையாசிரியர். இந்த 'அகரம்' ஆறன்பொருண்மை பெற்றிருத்தல் காணலாம்.

II. உகரப்பேறு :

1. உகரம்-ஒலிப்புத்துணையாதல் (Enunciative)

புள்ளியீற்று நிலைமொழிகள் உகரம் பெற்றுப்பின் வருமொழிகளுடன் புணர்தலைப் பல நூற்பாக்களில் தொல்காப்பியர் சுட்டுகிறார். (தொல். தொகை. 163, புள்ளி. 296, 297, 298, 306, 327, 328, 34:, 373, 376, 382, 401, 403). ஈண்டு உகரப்பேறு அல்வழிக்கண் எழுவாய்த் தொடரிலும், வேற்றுமைக்கண் ஆறன் பொருட்புணர்ச்சியிலும் தோன்றக் காண்கிறோம். உரிஞ், பொருந், வெரிந், மண், செம், ஈம், கம், உரும், மின், பின், பன், கன், வல், புல், தெவ், துள், புள், வள் முதலியன உகரம்பெற்று உரிநு, பொருநு வள்ளு என நிறுத்துக் கடிது, கடுமை என்ற வருமொழிகளுடன் புணர்த்துக் காட்டுவர்.

அங்ஙனமே, ஔ ஈற்று நிலைமொழி உகரம் பெறுதலையும் ஆசிரியர் விதித்தனர் (தொல். உயிர். 295).

இனி எண்ணுப்பெயர்களில் ஏழ், ஓர், ஈர் என்பன முறையே எழ், ஓர். இர் எனவாகி உகரம் பெற்றுப் புணரும் என்றார் (தொல். 389, 438). இங்குக் கூறிய சொற்களில் எல்லாம் ஈற்றில் தோன்றிய உகரம் Enunciativeu (-ஒலித்தற்கு உதவும் உ) எனக் கொள்ளுதல் சாலும். நச்சினார்க்கினியர், 'தன்னினம் முடித்தல் என்பதனான் அம்மு, தம்மு, நம்மு எனச் சாரியைக் கண்ணும் உகரம் வருதல் காண்க' (தொல். புள்ளி. 328, பக்கம் 196) என்று எழுதுதலின், சாரியையின் வேறாய் உகரத்தினைக் கருதினர் என்க. 'காமர்' என்ற சொல் உகரம் பெற்றுக் 'காமரு' (பரி. 1:62) எனவந்துழி, உகரம் பகுதிப்பொருள் விகுதி என்றனர் பரிமேலழகர்.

(வளரும்)

திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A.,

(மலர் 30. இதழ் 12. பக்கம் 671 இன் தொடர்ச்சி)

229. வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தம் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்தம் மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர் – வேதமுடிவை அறிவு விரும்பிய அந்தணர். வேதாந்தம் கேட்டுந்தம் வேட்கை ஒழிந்திலர் - வேதாந்தம் கேட்டும் தம் ஆசையை விட்டாரில்லை. வேதாந்தமாவது வேட்கை ஒழிந்திடம் - ஆசையை விட்ட இடமே வேதத்தின் முடிவாம். வேதாந்தங் கேட்டவர் வேட்கை விட்டாரே - வேதாந்தத்தை உண்மையாகக் கேட்டதனோடு நில்லாது அனுபவத்திலும் உள்ளவர் ஆசையை விட்டவராவார்.

வேட்கை - ஆசை ; வாய் வேதாந்தம் பேசிப் பயனில்லை. உண்மையாகப் பொருளைக் கேட்டுத் தெளிந்து சிந்தித்து அனுபவத்தில் நிற்கவேண்டும். அப்பொழுது தான் ஆசை நீங்கும் என்க. ஒழிந்த இடம் என்பது 'ஒழிந்திடம்' என விகாரப்பட்டு நின்றது. ஆசையற்ற இடமே வேதாந்தம் என்பதாம். 6

230. நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே.

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ - சொல்லுமிடத்து பூணூலை அணிந்து சிகை வைத்திருந்தால் அந்தண்மை ஆகுமா? நூலது கார்ப்பாசம் - பூணூல் பருத்திப்பஞ்சு. நுண்சிகை கேசமாம் - சிறியசிகை உரோமமாகும். நூலது வேதாந்தம் - இடகலை பிங்கலை சுழுமுனையாகிய மூன்று நாடிகளையும் ஒன்றுக்கி உணர்வதே மறை முடிவு. நுண்சிகை ஞானமாம் - அதன் பயன் பிரம நாடி சிறந்து சிரசில் ஞானம் விளங்கும். நூலுடை அந்தணர் காணும் நுவலிலே—சொல்லுமிடத்து பூணூலைத் தரித்த அந்தணர் உணர்வாராக.

கார்ப்பாசம்—பருத்தி (Tamil Lexicon) சிகை—குடுமி நூல் - மார்பில் பூணும் நூல். முப்புரியால் ஆக்கப்பட்டது. முப்புரியே இடபிங்கலை சுழுமுனையாம். இம் மூன்றையும் ஒன்றுக்கியபோதே தெளிவு உண்டாகும் என்க.

நூலும் சிகையும் பூண்பதோடு அவற்றின் உண்மையையும் அறியவேண்டும் என்பதாம். 7

231. சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடயம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.

சத்தியம் இன்றி - மெய்ப்பொருள் அறிவின்றி. தனிஞானந் தானின்றி - தன்னை உணரும் ஞானமும் இன்றி. ஒத்த விடயம் விட்டோரும் உணர்வின்றி - மனத்தோடு பொருந்திய விடய வாசனைகளை நீத்து உண்மையை உணருகின்ற உணர்வுமின்றி. பத்தியம் இன்றி - மெய்யான பத்தியும் இன்றி. பரன் உண்மை யின்றி - மேலான பொருள் ஒன்று உண்டு என்ற நினைவின்றி, பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே - அறியாமை நிறைந்த மூடர் அந்தணராவாரோ ? ஆகமாட்டார்.

ஒத்த விடயம் விடுதல் - மனத்தோடு பொருந்திய விடய வாசனைகளை நீக்கி விடுதல்.

உலக இன்பத்தை விட்டு மெய்ப்பொருள் அறிவுடையாரே அந்தணராவார் என்பதாம். 8

232. திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே.

திருநெறி யாகிய சித்தசித் தின்றி - மேன்மையான பிரணவ நெறியில் அறிவு அறியாமை யின்றி. குருநெறியாலே குருபதஞ் சேர்ந்து - குருஉபதேசத்தினுலே திருவடியைப் பொருந்தி. கரும நியமாதி கைவிட்டுக் காணும் - பிரணவ நெறியில் செல்வதால் புறக்கிரியைகளை விட்டு இருக்கும். துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே - தூய்மையான அந்தணர்க்கு ஒளியுடன் பொருந்தி நிற்றல் உண்டாம்.

சித்து அசித்து இன்றி இருத்தல் - அறிவு அறியாமை நீங்கி மெய்ஞ்ஞான நிலையில் நிற்றல். துரிய சமாதியாவது, ஒளியோடு பொருந்தி நினைவற்றிருத்தல்.

அந்தணர் ஒளியோடு பொருந்தி நிற்பர் என்பதாம். 9

233. மறையோ ரவரே மறையவ ரானல்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலாகல மென்
றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே.

மறையோரவரே மறையவர்-வேதங்களைப் பொருளுணர்ந்து ஓதுபவரே அந்தணராவார். ஆனல் மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை - ஆனல், மறையவர்தம் வேதாந்தம் உண்மையாகத் தூய்மையுடையது. குறையோர்தல் மற்றுள்ள கோலாகலமென்று - வேதமல்லாத மற்றைய குறையுள்ள நூல்களைக் கற்றல் ஆரவாரத்துக்கேயாம் என்று. அறிவோர் மறைதெரிந் தந்தண ராமே - அறிந்து ஓதுக்குபவர் மறையோதிய அந்தணராவார்.

குறைஓர்தல் கோலாகலம் - வேதமல்லாப் பிற தருக்க முதலிய நூல்களைக் கற்றல் ஆரவாரம்.

அந்தணர் பிற நுல்களைக் கல்லாது வேதத்தையே ஓதுவர் என்பதாம். 10

(தொடரும்)

பாரதியார் பாட்டு நலம்

திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.,

(மலர் 31, இதழ் 1, பக்கம் 33 இன் தொடர்ச்சி)

அமைப்புநலம் :

கவிஞன்பெற்ற உணர்ச்சி, அதனை உணர்த்தற்கேற்றசொல் அதற்கியைந்த நடை, கூறவந்த கருத்துச் சிதையாது ஒருமை யும் முழுமையும் பெறல் இவையாவும் இயைந்து அமைவதே அமைப்பு - வடிவம் ஆகும். 4பாட்டின் பெருமை, உணர்ச்சியின் ஊற்றத்தைப் பொறுத்தது; பாட்டின் அருமை அவ்வுணர்வுக்குத் தரப்படும் வடிவத்தைப் பொறுத்ததாகும். பாட்டின் பெற்றியே அமைப்பாகும்.5 இத்தகு அமைப்புநலம் பாரதியின் பாடலில் உள்ளது; எனவேதான் நலம் நனிசிறந்து விளங்குகிறது. 'திக்குத் தெரியாத காட்டில்......எனும் பாட்டு இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாகும். குயில்பாட்டில் சிலபல இடங்கள் இந் நலம் கனிந்து காணப்படுகின்றன.

---

4 The aspect which symbolises the unity of the subtance, in a single act of comprehensive attention, we call the form of a piece of literature.

— L. Abercrombi Principles of Literary crviticism.

The sum of all the means by which the writer strives to convey his combined thought and emotion to the reader, we may call literary form.

—C. T. Winchester. Some Principles ef Litirary criticism.

5 The form of verse is not separble from the soul of Poetry; Poetry has ncither Kernal nor husk, but is all one.

— W P. Ker.

சந்தநலம் :

எதுகைமோனை நலங்களையே இவண் எண்ணுகின்றோம். பாரதிக்கு இவை தாமே வந்து அமைந்து நலம் பயக்கின்றன. செந்தமிழ் நாடு எனும் பாட்டினிலே, போதினிலே, காதினிலே, பேச்சினிலே, மூச்சினிலே என அடி இயையும்; செந்தமிழ் நாடு தந்தையர் நாடு என்ற அடி எதுகையும் அமைந்து ஒலிநலம் ஓங்கிடச் செய்வதைக் காணலாம். வந்தே மாதரம் எனும் பாட்டிலும்,

நொந்தே போயினும், வெந்தே மாயினும்
நந்தே சத்தர் உவந்தே சொல்வது — வந்தே மாதரம்
ஒன்றாய் நின்றினி, வென்று மினுமுயிர்
சென்றாயினும் வலி குன்று தோதுவம் — வந்தே மாதரம்.

இந்நலம் இனிதமைந்து பாட்டுக்கு ஈர்ப்பும் பொருளுக்குக் கவர்ச்சியும் ஊட்டுதல் காண்க.

ஒலிநலம் :

இதனைத்தான் 'இழும்' என்பர் தொல்காப்பியர். (பா எனப் படுவது, இழுமென் மொழியால் விழுமியது நுவலல்.) உணர்ச்சிக்கும் ஒலிக்கும் உறவு உண்டு. உணர்ச்சியால் ஏற்படும் உள்ள அசைவே பாட்டாக வடிவெடுக்கிறது. சொற்களின் ஒருவகை ஒழுங்கே ஒலிநயம்; இதற்குப் புலன்களை உள்நோக்கி ஒன்றச்செய்யும் உள்முக ஆற்றல் உளது. எனவேதான் Poetry is rhythmical என்றார் கிருஸ்டோபர் கென்டுவெல் என்பார். பாட்டில் ஒலிக்கப்படும் ஒலிகளின் ஒழுங்கே ஒலிநலம் ஆகும். தொல்காப்பியர் செய்யுளியல் முதல் நூற்பாவில் வண்ணங்களாக இதனை இயம்புகிறார். பாட்டியல் நூல்கள், வெண்பாவுக்குச் செப்பலோசை, ஆசிரியப்பாவுக்கு அகவலோசை, கலிப்பாவுக்குத் தூங்கலோசை, வஞ்சிப்பாவுக்குத் துள்ளலோசை என வரையறுக்கின்றன. ஒலிநலம் குறைந்தது அகவற்பா; ஒலிநலம் மிகுந்தது விருத்தப்பா. இவ்வொலி நலமே, கம்பன் கவிதையின் உயர்வுக்கும், சங்கச் செய்யுட்களின் உயர்வின்மைக்கும் ஏதுவாகிறது. பாரதியின் பாக்கள் நலம் சிறந்து விளங்குதற்கும்; அப்பாக்கள் ஒலிநயம் அமைந்த நீர்மையே நல்ல காரணம் எனலாம். அந்தப்பாட்டைப் படிக்கும் போதும் ஒலிநலம் செவியை ஈர்த்துச் சிந்தையைக் கொள்ளைகொண்டு விடுகிறது; அறிவு மயங்கி உணர்வு ஓங்கி விடவே, உள்ளம் உவகையில் ஆழ்கிறது. இந்த ஒலிநலம் உருவாக பாரதி சில முறைகளையும் கையாள்கிறார். 'பாருக்-

குள்ளே நல்ல நாடு' என்ற பாட்டில், ஞானத்திலே, பரமோனத்திலே எனப் பாடல் முழுதும் ஏகாரத்தை இணைத்து இன்னொலி எழச்செய்கிறார். பாஞ்சாலி சபதத்தில், பாஞ்சாலியைப் பணையமாக வைத்திழந்ததை எண்ணி வெந்து நொந்து வீமன்பேசும் போது, ஐகாரம் கொடுத்து விந்தைமிகு ஒலி உண்டாக்குகின்றார் பாருங்கள்.

மாதர் குல விளக்கை — அன்பே
வாய்ந்த வடிவழகை
துருபதன் மகளைத் — திட்டத்
துய்நன் உடன் பிறப்பை
இருபகடை யென்றாய் — ஐயோ
இவர்க் கடிமை என்றாய்.

இசைநலம் :

பாரதி நலத்தின் வளத்திற்கு அடிப்படை; அப்பாடல்கள் பெரிதும் பண்ணோடு பாடுமாறு அமைந்ததே. அதனாற்றான் கவிமணி, பாரதி பாட்டினைப் பண்ணோடு ஒருவன் பாடக்கேட்டுக் கிறுகிறுத்துப் போனதாகக் கூறியுள்ளார். பாரதியாரே பண்ணமைத்துப் பாடியுள்ளார். இசையோடு பாடப்படும்போது பாட்டு உள்ளத்தை ஊடுருவி நிற்கிறது. பழகிய மெட்டுக்களையே பயன்படுத்திப் பாப் புனைந்தார்; பயன் மிகுந்தது. இதனாற்றான் 'சிந்துக்குத் தந்தை' எனப் பாராட்டினர் பாவேந்தர்.

தேசியப் பாடல்களை, பள்ளு, ஆனந்தக்களிப்பு, நந்தனார் கீர்த்தனைகள், காவடிச்சிந்து, நொண்டிச்சிந்து, கிளிக்கண்ணி போன்றவற்றில் பாடியமையால் எல்லோரையும் ஈர்த்தன, எளிதே உணர்ச்சிபெற ஏதுவாயின. இசைக்கு உருகாதார் யார்? அனைவரையும் பிணிக்கும் இசை தழுவியது இவர் பாட்டு; எனவே நலம் கனிந்து கவர்ந்ததில் வியப்பில்லை.

சொல்நலம் :

சொல் என்பது எண்ணத்தின் போர்வை எனலாம். 6 பாடற் பொருளை உணர்த்துவதும், கற்பனையைப் பகிர்ந்தளிப்பதும் சொற்களே. இச்சொற்களில் இனிய சொற்களை ஏற்ற இடத்தில் வைத்திழைப்பதே பாட்டென்பர்.7 பாட்டின்

6A word is the skin of a living thought and may vary in content and colour.

— Justice O. W. Homes.

7 Best words in the best order.

ஒரு சொல்லில் கவிஞன் வாழ்கிறான் என்பர்.8 கவிஞனின் அனுபவத்தின் விளைவாக அமையும் சொற்கள், படிப்போர்க்கு அவ்வனுபவத்தைத் தோற்றுவிக்கும் காரணமாக அமைகிறது; எனவே சொல், உணர்வின் திறவுகோல் எனலாம்.9 இத்தகு ஏற்றஞ்சான்ற சொற்களை ஆட்சி செய்வது மாட்சிமை மிகுவிக்கும். இவ்வகையில் பாரதியின் திறம் வியந்து செயல்மறந்து பாராட்டற்பாலது. இதைத்தான் கவிமணி, 'சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமேயடா' என்றார்.

சொல்லும் பொருளும், பருந்தும் நிழலும்போல் இணைந்து செல்லல் வேண்டும். பொருள் அழுத்தத்துக் கேற்ப சொல் அழுத்தம் பெற்றுநிற்கும். கருத்து வளத்தைச் சொன்னலம் சுட்டிக்காட்டும். பாஞ்சாலி சபதத்தில் விலைப்பட்ட பாஞ்சாலியை,

முன்னே பாஞ்சாலர் முடிவேந்தன் ஆவிமகள்
இன்னே நாஞ்சூதில் எடுத்த விலைமகள்

'விலைமகள்' என்ற சொல்லாட்சியில் காரணப்பெயர் அமைவதோடு, பரத்தை என்ற இழிவும் இழையோடக் காணலாம். அடுத்து துச்சாதனன் துகிலுரிய முனைந்த காலை, 'பாஞ்சாலி' என்னுமல் 'அன்னை' (துகிலினை உரியலுற்றான்) என்கிறார். தனியொருபெண் என்ற எண்ணத்திற்கு மாறாக, தாய் என அனைவருக்கும் சினந்தோன்றுமாறு அமைத்துள்ளார்.

இதுபோன்றே பிற இடங்களிலும் பொருள் பொதிபதமாக (Pregnant word) புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு: தெற்கில் வாழும் குமரிமுனை பாப்பா; சாதிகள் இல்லையடி பாப்பா; குலத் தாழ்ச்சி யுயர்ச்சி சொல்வல் பாவம்; ஆன்றோர்கள் தேசமடி தினமும் புகழ்ந்திடடி; தெய்வமென்று கும்பிடடி என்றெல்லாம் சொல்லாட்சி செய்கின்றார். (வளரும்)

---

8 Poet lives in a single word. In a single line sometimes in a single ephithet, The poet can flash upon our imagination a picture that shall seem filled with passionate emotion.

— C. T Winchester.

9 The words which seem to be the effect of the experience in the poet seem to become the cause of a similar experience in the reader. They are the Key for this particular combination of impulses.

— I. A. Richards.

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 30, இதழ் 12, பக்கம் 684 இன் தொடர்ச்சி)

46. பன்றிக்குட்டிகளை மந்திரிகளாக்கியது

தந்தை தாயிழந்து அலமந்த குருளைகளுக்குத் தாயாகிவந்து முதல்வன் தண்ணளி சுரந்த பாங்கைக் கண்டோம். இனி அப் பன்றிமுக வீரர்களுக்கு அமைச்சுப் பதவியைத்தந்து அவர் களுக்குச் சிவலோக மருளின வகை கூறுவோம்.

பால்கொடுத்துப், பரஞானமுங் கொடுத்துப், பார்க்க நல் லுருவமும் அருளிய பரமேஸ்வரன் மறைந்த பின்பு அப்பன்றி முகக் குமரர்கள் கலைகளில் வல்லவர்களாகி பன்னிரு கதிரவர் களைப் போல் பன்றிமலையில் வீற்றிருந்தார்கள்.

சகலசீவ தயாபரன் :

உமாதேவி ஒருநாள் இத்தன்மையை உணரவேண்டும் உலகம் என்பதற்காகப் பெருமானிடம் ஒரு ஐயவினைத் தொடுத் தாள். ஐயனே ! மிகக்கொடியதான அறிவற்ற விலங்காகிய இப் பன்றியின் குட்டிகளை நீர் இரங்கித் தாயாய் வந்து தழுவிய தேன் ? பாலொடு ஞானத்தையும் குழைத்து இவற்றிற்கு அன்பு செய்த காரணத்தை அடியாள் உணர அருள்க-என்று வேண்டி நின்றுள். இறைவன் மெல்லச் சிரித்து, நன்று; நவில்கிறேன் கேள் - சகலவேத ஆகமங்களும் நம்மைச் சகலசீவ தயாபரன் என்றல்லவோ கூறுகின்றன. இதில் அறிவுள்ள அறிவற்ற சீவன் என்றெனக்கு வேறுபாடு இருக்கலாமா ! அதோடு தாயையிழந்து, பசித்தழல் வயிற்றிலும், ஆதவனின் வெயில் புறத்திலுஞ் சுட அவைகள் வருந்தியபோது காப்பது என் கடனல்லவா. அக்குட்டிகள் என்னைத் தழுவிப் பாலருந்திய மையால் அளவிலாற்றலோடு கலைத்திறனும் கல்விஞானமும் கைவரப்பெற்றன. இனி, அவைகள் பாண்டியன், இராசரா

சனின் அமைச்சர்களாகி நன்னெறிநின்று விடுபெறும் என்று தேவிக்கு ஈசன் எடுத்துரைத்தான்.

பாண்டியனின் கனவிலும் அருளினர் :

வேந்தனின் கனவில் வந்த விமலன், பன்றிமலையில் பன்றி முகக் குமரர்கள் பன்னிருவர் உள்ளார்கள். அவர்களை உன் அமைச்சர்களாகக் கொண்டு சிறந்த அரசாட்சியினைச் செய்க - என்று அருளாணையிட்டான். வேந்தனும் விழித்து இறைவனது அருளிப்பாட்டை உணர்ந்து வியந்தான் விடிந்ததும் தன்னவையில் இருந்த அமைச்சர்களிடம் இச்செய்தியையறிவித்துப் பன்றிமுகக் குமரர்களை அழைத்துவர ஆணையிட்டான். அவர்கள் உடனே ஆணையைச் செயலாற்றினர்கள்.

மதுரைவந்த வராகமைந்தர்களுக்கு மன்னன் அமைச்சியற் கிழமையோடு பல்வேறு சிறப்புக்களையும் நல்கி; பழைய அமைச்சர்களின் புதல்விகளை இவர்களுக்கு வேதவிதிப்படி மணம் முடித்துவைத்தான். பன்றிமுக அமைச்சர்களும் மன்னன் பால் மிக்க அன்புகொண்டு அவனுக்குக் கண்ணும் கவசமுமாய் விளங்கினர்கள்.

பன்னிரண்டு உடம்பிற்கும் உயிரொன்றே என்று கூறும் வண்ணம் விளங்கிய அவர்கள் 'ஐந்தலைநாகம் ஐந்துவாய் வழியாகவும்' கொள்ளுகின்ற இரையொத்து உறுதிபடைத்த நெஞ்சினராய் விளங்கினர். நல்ல பசுவின் பாலிலே நறுந்தேனுங் கலந்தாற்போல் இயற்கையறிவோடு கூடிய நூலறிவைப் பெற்றிருந்தனர். சோர்வற்ற சொற்களை வேற்றவரும் விரும்பும் வண்ணம் மொழியும் வன்மையும்; பிறர்சொல் பயன்கொள்ளும் தன்மையும் அவர்களிடம் இருந்தன. நாம் மிகப் பழையேம்; அதோடு அரசனல் நன்குமதிக்கப்பட்டோம் என்று இறுமாப் படையாமல் அருகே வேலைசெய்யும் சிறுவர்களைப்போல ஒதுங்கி நடந்து வந்தார்கள். மன்னனை நெருப்பாகக் கருதி அணுகாமலும் அகலாமலும் இருந்துவந்ததோடு, மன்னன் விரும்புகிற பொருள்களைத் தாம் விஷமென ஒதுக்கி நின்ருர்கள்.

தீக்கொளுத்தல், நஞ்சிடுதல், கருவியால் கொல்லுதல், திருடுதல், வழிபறித்தல், பிறர்மனை நயத்தல் இவைபோன்ற ஆன்ருேரால் விலக்கப்பட்ட செயல்களை மக்கள்யாரும் செய்யாததனல் மக்களைத் தண்டித்து அதன்மூலம் பெறும் பொருளை அவ்வரசு இழந்தது. பகைவர்கள் யாரும் இல்லாததனல் திறைப் பொருளுக்கும் வழியில்லை.

இந்த அமைச்சர்கள் மக்கள் மனமுவந்து தரும் ஆறிலொரு பங்கு வரியைக் கொண்டே அரசியற் காரியங்களை ஆற்றினர்கள். வேந்தனின் கொள்கைகளைக் கண்ணாடி போன்ற தம் மனங்களில் நன்குகொண்டு அவற்றுள் அறம் பொருந்திய செயல்களை மட்டுமே ஆர்வத்துடன் செய்தனர். அறம்பிழைத்த கொள்கைகளுக்குத் தம் செல்வமும் உயிரும் பறிபோகும் என்ற நிலை வந்தாலும் ஆக்கந்தாராமல் ஆட்சி செய்தனர்.

இப்பன்னிருவர் துணையாலும் தென்னவனுக்கு நாள்தோறும் ஈகையும் தருமமும் புகழும் பெருகிற்று. திசையெல்லாம் வெற்றியே நிறையத் தொண்டுகள் பல செய்தபின் பன்னிரு வராகமுக அமைச்சர்களும் பாம்பணிவேணிப்பிரானின் சிவபுர மடைந்து இன்பமார்ந்திருந்தார்கள். வேந்தன் இராசராசனும் விண்ணுலகடைத்து வீற்றிருந்தான்.

(வளரும்)

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பொன் மொழிகள்

மலர்ந்து மனத்தைக் கவர்ந்து மறைகின்ற மலர்கள். கனிந்து கருத்தைக் கவர்ந்து இனிக்கின்ற பழங்கள் எல்லாம் வளர்ச்சியும் தேய்வும் உடையன என்பதை யாரால் மறுக்கமுடியும்? ஆதலால் இவை செயற்கையே: செயற்கைகள் எல்லாம் கருத்தாவை உடையனவே. அந்தக் கருத்தா வளர்ச்சியும் தேய்வும் இல்லாமல் – அதாவது தான் செயற்கையாகிவிடாமல் இருக்கவேண்டும். ஆதலால் அவனுக்கு முதல் இல்லை; முதல் இல்லையாகவே அவனுக்கு முடிவும் இல்லை என்பது தெளிவு. அவனுடைய அருள் விளையாட்டின் ஆக்கமே இந்தக் காடும், மலையும், கடலும், வளமும், வயலுமாகிய எல்லாம்.

* * * *

அநாதியே ஆற்றுப் பிரவாகம்போல இடையறாது வந்து கொண்டிருக்கும் பிறப்பு இறப்புத் துன்பத்தைப் போக்கி நிரதிசயானந்த இன்பத்தை அளிப்பது வீடு. ஆதலால், ஞானிகள் அதனையே விரும்புகிறார்கள். சிற்றின்பம் மதுமயக்கம் போல்வது. பேரின்பம் கடவுளுணர்ச்சியால் எய்துவது, அதற்கு ஒப்பே இல்லை.

சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்ஞகரம்,

சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 30, இதழ் 12, பக்கம் 692 இன் தொடர்ச்சி)

தேவி கல்பங்கள் :

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம், துர்கோபாஸநகல்ப்பத்ருமம், ஸ்ரீவித்யார்ணவம் முதலிய நூல்களில் கூறியபடி தேவியை உபாசிக்கவேண்டும் என்றும், இதனால் சதசண்டிஹோமம், சஹஸ்ரசண்டீஹோமம் நவாவரணபூஜை முதலியன செய்ய வேண்டும் என்றும் ஆகமங்கள் அதிகாரம் அளித்திருக்கிறது என்பது தெரிகிறது. —அபியுக்த்தர்.

काली तरा महाविद्या षोडशी भुवनेश्वरी ।
भैरवी छिन्नमस्ता च विद्या धूमावती तथा ॥
बगला सिद्धविद्याच मातङ्गी कमलात्मिका ।
एता दशमहाविद्याः सिद्धविद्याः प्रकीर्त्तिताः ॥

— मंत्रमहार्णवम्

காளி, தாரை, மஹாவித்தையான ஷோடசீ, புவனே, பைரவீ, சின்னமஸ்தா, தூமாவதி; பகளா, மாதங்கீ, கமலாத்மிகா என்று பத்து சக்திகளுக்கு தசமஹாவித்தை என்று பெயர். இதைத்தவிர மற்றும், பாலே ஸ்யம்வரை, துரகாரூடை, வாராகி முதலிய சக்திகளும், துர்க்காதேவி என்ற சக்தியும் மனதினாலும் அளவிடமுடியாத பயன்களைத் தரும் ஆற்றலுடையவர்கள். ப்ரணவத்திற்கு தேவதை சிவன். மாயா பீஜத்திற்கு தேவதை புவனேச்வரி. ஆதலால் இந்த ஹ்ரீம் என்னும் மாயாபீஜத்திற்கு புவனேச்வரீ பீஜம் என்று பெயர். இந்த புவனேச்வரீ பீஜம் என்ற பெயருடைய பிந்துவினின்றும் இச்சா ஞான கிரியா ரூபிணிகளான ரௌத்ரீ, ஜ்யேஷ்டா

வாமா சக்திகள் தோன்றினர்கள். அந்த சக்திகளே மஹாகாளீ மஹாலக்ஷ்மீ மஹாசரஸ்வதீ என்று பெயர் பெற்றூர்கள்.

—சப்த்தசதீஸர்வஸ்வம்.

இந்த மூன்று சக்திகளையும்சேர்ந்து உபாசிக்க நவார்ணம் என்ற மந்திரம், சப்தசதீ என்ற மந்திரம் ஆக இரண்டுவிதமான மந்திரங்கள் சிறந்தவை.

நவார்ணம் ப்ரதான மந்திரம். ஆயினும் சப்தசதிக்கு அங்கமாகும். — மேருதந்திரம்.

சப்தசதி என்பது 700 மந்திரங்களைக் கொண்டது.

ஸப்த்தசதியை அறிந்தவன் யான் ஒருவன்தான் என்று இறைவன் கூறுகிருன்.

सप्तशत्याश्च सकलं तत्वं वेदूम्यहमेवहि ।
पादोनं श्रीहरिर्वेत्ति वेत्यर्धं तु प्रजापतिः ॥
व्यासः तुर्यांशकं वेत्ति कोट्यंश मितरे जनाः ।

— मेरुतंत्रे

சப்த்தசதியிலுள்ள எல்லாவற்றையும் நான் அறிவேன். முக்கால்பங்கு விஷ்ணு அறிவார். அரைப்பங்கு பிரும்மா அறிவார், கோடியில் ஒருபங்கை மற்ற ஜனங்கள் அறிவார்கள் என்று சிவபெருமான் கூறுகிருர்.

தேவர்களுக்கு ஆபத்து வந்தபொழுது தேவியைத் துதித்தார்கள்; அப்பொழுது சித்சக்தியான தேவி காளியாகவும் பிறகு லெக்ஷ்மியாகவும், பிறகு சரஸ்வதியாகவும் தோன்றினள்.

— ஸர்வஸ்வம்.

எவ்வாறு யாகங்களுள் அச்வமேதமோ? எவ்வாறு தேவர்களுள் விஷ்ணுவோ? அதுபோல தேவி ஸ்தோத்திரங்களுள் சப்த்தசதீ மிகவும் மேன்மை உள்ளது.

— டாமரதந்திரம்.

சப்த்தசதி என்பது மூன்று சரிதங்களையுடையது. அதில் முதல் சரித்திரத்தில் காலா, தாரா, சின்னமஸ்தா, சுமுகீ,

புவனேச்வரீ, பாலா, குப்ஜா என்ற ஏழு சக்திகள் இடம் பெறுவார்கள். மத்தியம சரித்திரத்தில், லக்ஷ்மி, லலிதா, காளீ, துர்க்கா, காயத்ரீ, அருந்ததீ, ஸரஸ்வதீ என்ற ஏழு சத்திகள் இடம்பெறுவார்கள். உத்தர சரிதத்தில் ப்ராம்மி மாகேச்வரி, கௌமாரீ வைஷ்ணவீ, வாராஹீ மாகேந்தரீ, சாமுண்டீ என்ற ஏழு சத்திகள் இடம்பெறுவார்கள். இந்த இருபத்தி ஏழு சத்திகளுக்கு சமஷ்டியான வடிவம், நந்தா, சதாக்ஷீ, சாகம்பரீ, பீமா, ரத்ததந்திகா, துர்க்கா, ப்ராமரீ என்ற ஏழு சத்திகள் புகழ்பெற்றவர்கள்; ஆதலால் இதற்கு ஸப்த்தஸதீ என்றும் பெயர். — மேருதந்திரம்.

சண்டிஹோமம் செய்ய இந்த சப்த்தசதீயே முக்கியம். ராஜவிட்வர காலத்திலும் அதிவிருஷ்டி முதலிய காலங்களிலும் ராஜ்ய ப்ராப்த்தியின் பொருட்டும் சதசண்டிஹோமம் செய்யவேண்டும்.

சப்த்தசதி, சதசண்டிஹோமம் நடத்தும் தேசத்தில் அந்த யக்ஞம் நடைபெறும் இடத்திற்குச் சுற்றி இருபத்து ஐந்து யோஜனை தூரம் எந்த ஆபத்தும் வராது.

— கிலமார்க்கணம்.

இந்த சப்த்தசதியினல் தேவியை ஆராதித்தால் முற்கூறப்பட்ட எல்லா சக்திகளும் சந்தோஷமடைவார்கள். "நாநாசக்திகளை உபாசிக்கவேண்டும்" என்ற காரணகம விதிக்கும் பொருத்தமானது

(நவார்ணமந்திர விளக்கம் மேலே வரும்)

நவராத்திரியில் தேவியின்பூஜை செய்ய நவாவரணபூஜை விசேஷமாகும். துர்க்காதேவிக்கு பூஜிக்கப்படும் நவாவரண பூஜைக்குமுன் ஏகாதச நியாஸம் செய்வது இன்றியமையாதது.

உபசாரத்தில் சதுஷ்ஷஷ்டி உபசாரம் செய்வது உத்தமோத்தமம் அல்லது ஷோடச உபசாரம் செய்வதும் சிறந்தது. இரவில் விசேஷமான உபசாரங்கள் செய்யவேண்டும்.

காலை பூஜையின் முடிவில் குமாரி பூஜை, சுவாஸினீ பூஜை, வடுபூஜை செய்யவேண்டும். இது சண்டிஹோமத்தின் அங்கமாகும்.

இரண்டுவயது முதல் பத்துவயது வரையிலுள்ள வயதுடையவர்களாக குமாரிகள் இருக்கவேண்டும்.

குறைவான அங்கமுடையதாய் வியாதியுடையதாய், குலத்தில் அவளுக்குப் பிறகு சந்ததி இல்லாததாயுள்ள குமாரி கூடாது.

जात्यन्धां केकरां काणीं कुरूपां तनुरोमशाम् ।
संत्यजे द्रोगिणीं कन्यां दासीगर्भ समुत्भवाम् ॥

— निर्णयसिंधै

பிறவிக்குருடியாய், ஏகாக்ஷியாய், குரூபியாய், சிறியதான உரோமமுடையதாய், ரோகியாய், தாசியின் வயிற்றிலுதித்தவளாய் உள்ள குமாரி பூஜைக்குத் தகுதி இல்லை.

இவ்வாறு சுவாஸினியும் லக்ஷணமுள்ளவளாய், தருணியாய், சாந்தசுவபாவமுடையவளாய், அனுகூலமுள்ளவளாய், சந்தோஷமுள்ளவளாய், சுசியாய், சங்கையற்றவளாய் பக்தியுடையவளாய், குருவிடமும், சாத்திரத்திலும் பிரியமுடையவளாய், பிரியமாகப் பேசுபவளாய், தேவதாபூஜையில் விருப்பமுடையவளாய், மனோஹரமான தோற்றமுடையவளாய் இருக்கும் சுவாஸிநியே பூஜைக்கு உரியவள்.

— குலார்ணவம்.

முரடான தோலுடையவள், லஜ்ஜையற்றவள், குலத்தை தூஷிப்பவள், துராசாரமுடையவள், துஷ்டர்களின் வசமுள்ளவள், பயந்தசுவபாவமுடையவள், சோம்பலுள்ளவள் சதா தூங்குபவள், துஷ்டபுத்தியையுடையவள். குறைவான அங்கமுடையவள், கெட்ட நாற்றமுடையவள், வயது முதிர்ந்தவள் பயித்தியம் பிடித்தவள், ரஹஸ்யத்தை வெளிப்படுத்துபவள். மூடை இந்த ஸ்திரீகள் சுவாஸிநீ பூஜைக்குத் தகுதி இல்லாதவர்கள்.

— குலார்ணவம்.

(தொடரும்)

கவிமணியின் கவிதைகள்

செஞ்சொற்கொண்டல், புலவர்
சொ. சிங்காரவேலன் M. A., Dip. Ling.,

(மலர் 30, இதழ் 12, பக்கம் 688 இன் தொடர்ச்சி)

பழந்தமிழ்க் காதல் ;

பழந்தமிழ் இலக்கியங்களிலே ஆழ்ந்து கிடந்த அறிவுச் செல்வர் ஆதலின் அவற்றின்பால் அயராத காதல் கவிமணிக்கு இருந்தது. அதனால். "தமிழ்மாதின் இனிய உயிர்நிலை" என்று குறளைப் பாடுவார்; "பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து, கம்பன் பாரிற் பொழிந்த தீம்பாற்கடல்" என்று இராமகாதையை ஏத்துவார். "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேரும் சிலப்பதிகாரம்" என்று சிலம்பைச் சிறப்பிப்பார்; (இலக்கிய பஞ்சகம் 1, 2, 3) இவற்றால் இவருடைய இலக்கியப்பற்றுத் தெளிவாகப் புலனாகும்.

திருக்குறளிலே கவிமணி தனித்த ஈடுபாடுடையவராகத் திகழ்ந்திருக்கின்றார் என்பது அவரது கவிதைகளிலிருந்து அறியக்கிடக்கின்றது;

" ஒழுக்கம் காட்ட வந்தோன்—தமிழுக்கு
உயிரை ஊட்ட வந்தோன் "

" அறிவின் எல்லை கண்டோன்—உலகை
அளந்து கணக் கிட்டோன் "

" சாதி ஒன்றேயாம்—தமிழர்
சமயம் ஒன்றேயாம்
நீதி ஒன்றேயாம்—என்று
நிலைநிறுத்திநின்றோன் " (திருவள்ளுவர்.)

என்றெல்லாம் கவிமணி கவியிசைக்கின்றார். " வித்தகன், தெய்வப் புலவன் திருவள்ளுவன் சொன்ன பொய்யில் மொழியிருக்கும்போது, புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச் சித்தம் கலங்கித் திகைப்பதேன் " என்று கவிமணி அறிவுலகை நோக்கி வினவும் பகுதி அறிவிற்கு விருந்து.

கவிநலம் காட்டல் :

கவிதைக்குத் தனி இலக்கணம் கண்ட கவிஞர் கவிதையின் சிறப்பை ஆங்காங்கு எடுத்துரைப்பார்; சிறந்த ஓரிடம் இது:

"ஓலை எரியும்; தாள் எரியும்;
உள்ளத் தெழுதி வைத்துநிதம்
காலை மாலை ஓதுகவி
கனலில் வெந்து கரிந்திடுமோ ?" (கவியமுதம் – 92)

கவிதை கனவாலும் வேகாத கனல் என்று சுருக்கமாகக் கூறி, அதன் ஆற்றலை, அழியாத் தன்மையை அழியாத கவியாக்கி விடுகின்றார் கவிமணி.

கதை பொதி பாட்டு :

வடநாட்டு மீராவையும், மலையாளத்து உமையம்மைப் பேரரசியையும், இசுரேல் நாட்டு ஏசு கிறித்துவையும் 'அன்பின் வெற்றி,' 'ஓர் இராணியின் சாபம்,' 'இரட்சகர்' ஆகிய முப் பெரும் பாட்டுக்களில் கொண்டுவந்து நிறுத்தி வரலாற்றை வான்சுவைக் கவிதையாக மாற்றி விடுகிறார் இக்கவிஞர்.

"உண்மை அன்பை உடையவரே
உலகை அளந்த பெருமானை
அண்மையாகக் கண்டிடுவர்;
அல்லார் காணார், காணாரே"

என்று அன்பின் வெற்றியில் இவர் முழங்குவது உண்மையன்பின் வெற்றியை எடுத்துக் கூறுகின்றது.

மொழிபெயர்ப்பா? முதற்பாட்டா ?

மொழிபெயர்ப்பைக் கூட மூலநூல் என்றே எண்ணுமாறு மாற்றும் வித்தகம் கவிமணியின் கவிதைக்கு உண்டு. குழந்தையை இழந்த தாய் ஒருத்தியிடம், மற்றொரு குழந்தை கூறும் கூற்றிலும் அதற்குத் தாய் விடையளிப்பதுமாக உள்ள 'முதல் துயரம்' என்ற 'பெலீஷியா ஹிமன்ஸ்' ஆங்கிலப் பாட்டின் தமிழாக்கமும், உமார்கயாம் பாடல்களின் தமிழாக்கமும், 'ஆசிய சோதி' தமிழாக்கமும் இதற்கு எடுத்துக்காட்டுக்களாகக் குறிக்கத்தக்கன :

"தும்பி பாடுதம்மா!—கிளிபயில்
சோலைதேடுதம்மா!
தம்பி எங்கே? அம்மா!—விளையாடத்
தனியே நின்றேன் அம்மா!"

" சின்னஞ் சிறுபிஞ்சு—வெள்ளரியில்
செழித்திருக்குதம்மா!
கன்னிக் காய்பறிக்கத்—தம்பியையும்
காணேமே அம்மா " (முதல்துயரம் 1, 4)

என்று அந்தப் பிஞ்சு நெஞ்சத்தைப் பேசுவிக்கும்போது நம் உள்ளம் அழுகிறதே! கண்ணீர் முத்துக் கோர்க்கிறதே! மொழி பெயர்ப்பால் முடியுமா இது? ஆம், கவிமணியால் முடியும்; உள்ளத்தின் உணர்வுகளைத் தூண்டிப் படமெடுத்தாடச் செய்யும் திறம் இப்பாவலர்க்கே உண்டு.

" வாச மலரைப் போல்—வளர்ந்தவன்
வாடிவிட்டானே!
ஈசன் சந்நிதியில்—விளையாடி
இருக்கின்ருன் அப்பா "

என்பது அத்தாயின் விடை; இதிலே விம்மலின் ஒலி கேட்கிறது; உதடுகளை மடித்துக் கண்ணீர் பெருக்குகின்ற தாயின் அவல முகம் நிழலாடுகின்றது. உண்மைக் கவிதையின் வடிவமும் இயல்பும் இவையே அன்ருே!

தன் கவிதை முத்திரை :

'போரின் கொடுமையைப் பாடுவதில்,' 'தொழிலாளியின் முறையீட்டைத்' தொடுப்பதில், 'சமதரும உலகம் காண விழைவதில்' இவர்க்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கையும் தெளிவும் இவரது அழகிய கவிதைகளில் வெளிப்படுகின்றன. பல நூலுக்குப் பாடித் தந்த பாயிரங்கள், சான்ருேர் பலர் மறைவிற்கு இரங்கிய கையறு நிலைகள், வாழ்த்துக்கள் ஆகிய எதுவாயினும் அதில் தன் முத்திரையைப் பதிவிக்கும் தனித்திறம் கவிமணிக்கு இருந்தது என்பது அவரது 'மலரும் மாலையும்' (பன்னிரண்டாம் பதிப்பு 1967) தொகுப்பினுல் தெரிகின்றது.*

" பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்;
பசுங்கிளிகள் அங்கிருந்து பாடவேண்டும்;
சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;
சபைகளிலே தமிழ் எழுந்து முழங்கவேண்டும் "

என்று விரும்பிய இப்பெரும்புலவரது விருப்பம் இன்று செயற் பட்டு நாடு தழைத்து நிற்கின்றது. தமிழ் தன் உரிய இடத்தைப் பெற்றுச் செழித்து வருகின்றது. தமிழ்நாடு எல்லா வகையாலும் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

---

* இக்கட்டுரை இப்பதிப்பே துணையாக எழுதப்பட்டுள்ளது.

" கஞ்சாவை நஞ்சாகக் கருத வேண்டும்;
கள்ளொழுகும் கடைவாயை மூடவேண்டும் "

என்பதும்,

" என்சாதி உயர்சாதி, இழிந்த சாதி
என்றுசொல நாவும் எழாதிருக்க வேண்டும் "

என்பதும்,

" தருமநெறி தவறாது தழைக்க வேண்டும்
சாதிமதச் சண்டையெலாம் ஒழியவேண்டும் "

(விண்ணப்பம்)

என்பதும் இப்பெரும் புலவரின் ஏனைய சில விருப்பங்கள். இவற்றை நிறைவு செய்தல் தமிழ்மாந்தர் கவிமணிக்கும் ஒரு வகையில் இயற்றும் கைம்மாறு எனல் மிகையன்று, இதனைக் காணக் கவிமணி அவர்கள் இன்றில்லை எனினும், அவர்படைத்த 'மலரும் மாலையும்' வழியே அவர் நின்று தமிழ்மாந்தரது தழைத்த வாழ்வு கண்டு இன்புறுவர்.

குழந்தைத் தமிழும் கவிமணியும் :

கவிமணியவர்களின் குழந்தைப்பாடல்கள் மிகமிக இனியவை குழந்தையர் நெஞ்சங்களில் உயர்ந்த குறிக்கோளை நிலைநாட்டும் உரம் உடையவை அவை. அதற்காகக் கடுமையான நடையையோ, சொற்களையோ கையாளமாட்டார் இக்கவிஞர். 'குழந்தை அகராதி'யில் தட்டுப்படும் சொற்களே குதித்தோடி வரும் அப்பாட்டுக்களில்; உற்சாகம் கொப்புளிக்கும்; உணர்ச்சி கூத்தாடும். தாலாட்டுப் பாடவருகின்ற கவிஞர் உள்ளத்து எத்தகைய உணர்ச்சிகள் எழுகின்றன? அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்களாகவே குழந்தையைக் கற்பனைக் கண்ணால் கண்டு களிக்கின்றார் கவிஞர் :

" பூமாலை வாடும்; மணம்
பொன்மாலைக் கில்லையென்று
பாமாலை வைத்து, ஈசன்
பாதம் பணிபவனே "

இது அப்பரடிகளாக மழலையைக் காணும் கற்பனை.

" பாலமுதம் உண்டு தமிழ்ப்
பாமாலை பாடி இந்தத்
தாலம் புகழ்வரும்
சம்பந்தன் நீதானோ "

இது திருஞானசம்பந்தராகக் காணும் கற்பனை.

"கொன்றையணிந் தம்பலத்தில்
கூத்தாடும் ஐயனுக்கு
வன்றொண்ட னுக
வளர்ந்தவனும் நீதானோ?"

இது சுந்தரராகக் கொண்டெழுந்த காட்சி,

"கல்லைப் பிசைந்து
கனியாக்கும் செந்தமிழின்
சொல்லை மணியாகத்
தொடுத்தவனும் நீதானோ?"

இது மணிவாசகராகக் கண்ட மனவெழுச்சி, நால்வர்க்கு இப் புலவர் தரும் அடைமொழிகள் ஆழ்ந்து உணர்ந்து இன்புறுதற் குரியன. தேவாரத் திருவாசகப் பாட்டுக்களில் தோய்ந்து கிடந்த சிந்தை ஆதலின், அந்தத் தொடர்கள் உணர்ச்சிப்பிழம்பு களாக எழுகின்றன.

'ஆறு' தன் வரலாற்றைப் பாடுவது போலக் கவிமணி பாடிய பாட்டுக்கள் குழந்தைகள் இலக்கிய உலகில் துருவ விண்மீன் என்று மதிக்கத் தகுந்தவை; 'குட்ரிச்' (Good rich) என்பாரின் ஆங்கிலப் பாட்டுக்களைத் தழுவிய பாடல் இது. இவ்வாறே 'எமர்சன்' (Emerson) எழுதிய பாடலைத் தழுவிய 'மலையும், அணிலும்' தமிழ் மழலைகள் மனத்தில் நீங்காத இடம் பெற்றவை.

சமூகமும் கவிமணியும் :

கவிமணியவர்கள் சமூகநிலை பற்றிய கவிதைகளும் இயற்றி யுள்ளார்கள்; இவர் பாடிய 'தீண்டாதார் விண்ணப்பம்' படிப்போர் நெஞ்சங்களை நெகிழ்வித்து உருக்கும் திறம் உடையவை.

"கண்ணப்பன் பூசைகொளும்
கடவுள் திருக் கோயிலிலே
நண்ணக் கூடாதோ நாங்கள்
நடையில் வரல் ஆகாதோ"

என்று ஆதிதிராவிடர் குரல் எழுப்புகிறார் கவிஞர். சைவ வைணவ வரலாறுகளில் சாதி வேற்றுமை பாராட்டாத சம நிலையை எடுத்து ஒவ்வொன்றுக்கக் கூறி வாதாடும் ஒவ்வொரு பாட்டும் சாதி இந்துக்களுக்குக் கவிஞர் தரும் சாட்டையடிகளாக 'விண் விண்' என்று வந்து விழும் வினாக்குறிகள்.

"பெற்றான் எனும் சாம்பானுக்குப்
பேறளித்த பெருமானை
வற்றாத அன்பொடு யாம்
வணங்குதலும் வழுவாமோ" (5)

"நந்தனுக்குப் பதமளித்த
நடராசன் கோயிலிலே
வந்தனைகள் செய்து நாங்கள்
வழிபடுதல் முறை அலவோ (7)

"பார்ப்பார்கள் தோள்சுமந்து
பாணரை முன் திருக்கோயில்
சேர்த்தார்கள் என்றகதை
தெரியாதோர் உண்டோ ஐயா ?" (9)

'பூவாரம் அணிந்த பெருமானின் திருமுன் தேவாரம் பாடலாகாதா நாங்கள்' (15) என்றும்,

'ஆவுரித்துத் தின்பரேனும் அரனடிக்கீழ் அன்பரெனில் தேவர் அவர் என்றுரைக்கும் திருமொழி வெறுமொழியோ' (26) என்றும் கவிஞர் கேட்கும் வினாக்களுக்கு என்ன விடைகூறிட முடியும்?

இவ்வாறே 'மதுவிலக்கு', (28-9-47 கல்கி இதழில் வெளிவந்தது) முதலிய பல பொருள்களைப் பாடி மக்கள் மனத்தில் அறஉணர்ச்சியைப் பதிய வைத்தவர் கவிமணி.

நிலைபேறு :

கவிமணியவர்களது கவிதை கற்றோர்க்கும் கல்லார்க்கும் விருந்தாக அமைவது; என்றும் படிக்கப்படிக்க இன்பமும்சுவையும் நல்குவது; உணர்ச்சி ததும்பும்படி, குழந்தையர் பாடிப் பயிலற்கும் ஏற்றது; "தமிழ்க் கவிதை மரபில் நின்று, நம்நாட்டின் விழுமிய எண்ணங்களையும் உணர்வுகளையும் உயரிய மிகத் தெளிவான சொற்களால் உரைத்த இப்புலவர் நம் இலக்கிய வரலாற்றில் நிலையான இடம் பெறுவது உறுதி" என 'இந்து'வில் (1939) வெளிவந்த திறனாய்வு * இன்று மெய்ம்மையாகி நிற்றல்கண்கூடு.

---

* "Standing right in the centre of the Tamil Poetic tradition and uttering in the best and clearest words the noblest thoughts and feelings of own country and own generation. Sri Desika vinayakam pillai is certain to achiere both a wide and immediate popularity and a permanste place in our literary history."

நிருதி

வேதாந்த சிரோமணி,

பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

தென்மேற்கு திக்கிற்கு அதிபதி நிருதி. நீலநிறமும், பெரிய உடலும் வலது கையில் கத்தியும், இடது கையில் கேடயமும் தரித்த இரண்டு கைகளும், பயங்கரமான கோரைப் பல்லுடன் கூடிய முகமும் உடையவனாய் மஞ்சள் ஆடையும் சகலவித ஆபரணங்களும் அணிந்து சவ வாஹனத்தில் இருப்பவன் என்று காச்யபசில்ப சூத்திரம் கூறுகிறது.

नैर्ऋतिर्नीलवर्णस्तु द्विभुजश्च महातनुः ।
खड्गं दक्षिणहस्ते तु वामहस्ते च खेटकम् ॥
पीतवस्त्रधरो रौद्रः करालमुखदंष्ट्रकः ।
सर्वाभरणसंयुक्तः शवारूढो जगत्पतिः ॥

(பட. 48 சு. 46-47)

ஈசான சிவாசார்ய விரசிதமான சிவலிங்கப் பிரதிஷ்டா விதியில் நாலாவது ஆவரணத்தில் திக்பாலகர்களின் பூசை சொல்லப்படுகிறது. அங்கு,

रक्तनेत्रं शवारूढं नीलोत्पलदलप्रभम् ।
कृपाणपाणिमस्त्रौघं पिबन्तं राक्षसेश्वरम् ॥

சிவந்த கண்ணும், நீலோத்பல இதழ்போன்ற காந்தியும், கையில் கத்தியும் உடையவனாகவும் சவத்தின்மீதேறி குருதியைப் பருகுகின்றவனாகவும் உள்ள ராக்ஷசர் தலைவனைத் தியானிக்க வேண்டும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. நிருதிக்கு மனைவி தாஹினீ என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

நிருதியின் முற்பிறப்பு வரலாறு காசிகாண்டத்தில் பன்னிரண்டாவது அத்தியாயத்தில் வருமாறு :-

விந்தியமலைச் சாரலில் நர்மதா நதிக்கரையில் பிங்கலாக்ஷன் என்று வேட்டுவர் அரசன் ஒருவன் இருந்தான். முற்பிறப்பி

செய்த நல்வினையின் பயனாக அவனுக்குச் சிவனடியார்களிடத்தில் பக்தி மிகுதியாக இருந்தது. காசி யாத்திரை செய்பவர்களுக்கு உண்டி, உடை, குடை, பாதரக்ஷை முதலிய கொடுத்து உதவி செய்தான். காசியாத்திரை செய்பவர்களை உங்களுக்கு வழியில் பயமுண்டானால் பிங்கலாக்ஷா என்று என் பெயரை உரக்கக்கூவி அழையுங்கள். நான் அங்கே வந்து உங்களுடைய அச்சத்தைப் போக்குவேன் என்று தைர்யமூட்டி அனுப்புவது வழக்கம். ஒரு சமயம் அவ்விதம் அனுப்பப்பட்ட சில யாத்திரிகர்களை வேடன் ஒருவன் வழிமறித்துக் கொள்ளையிட முயன்றான். வழிப்போக்கர் களும் பயந்து பிங்கலாக்ஷா பிங்கலாக்ஷா என்று உரக்கக் கத்தினர், கொள்ளையிட வந்த வேடனே அவர்கள் கூவியழைப்ப தைக் கேட்டு மேலும் கோபம் கொண்டு நம்முடைய குலத்தில் தோன்றிய ஒருவன்; நமக்கு அரசன்; அவன் தன்னுடைய குலத்தொழிலை விட்டு வேறுவிதமாக இருக்கிறானே என்று எண்ணி மேலும் பலமாகத் தாக்கினான். அச்சமயம் பிங்கலாக்ஷ னும் அங்கே வந்து வேடனுடன் போரிட ஆரம்பித்தான். அவ் வேடனே தனக்குத் துணையாகப் பல வேடர்களையும் அழைத்து வந்து பிங்கலாக்ஷனைப் போரில் கொன்றான். காசி யாத்திரை செய்யும் சிவனடியார்களைக் காக்க உயிர் துறந்தபடியால் நிருதியாகப் பிறந்து தவத்தினால் திக்பால பதவியை அடைந்தான் எனக் காணப்படுகிறது.

சிவந்த வஸ்திரமுடையவன், காளி தேவியைப் பூசிப்பதில் ஈடுபட்டவன். காளி என்பவளின் கணவன். ரக்ஷோவதி என்ற பட்டணத்தின் தலைவன். கழுதை கோவேறுகழுதை, காட்டுப்பசு இவற்றைக்கொண்டு செய்யப்படும் வேள்வியினால் சந்தோஷ மடைபவன். சேனைகளை அணிவகுப்பதில் திறமை யுடையவன். செந்நிறமான தாடி, மீசையுடையவன். துஷ்டர் களுக்குச் சந்தோஷ முண்டுபண்ணுகிறவன் என்பன போன்ற பல விஷயங்கள் நிருதியின் அஷ்டோத்தர சதநாமத்தால் உணரப்படுகின்றன. மனைவியின் பெயர் தீர்க்காவதி என்றும் பட்டணத்தின் பெயர் கிருஷ்ணாங்கனா என்றும் ஆயுதம் குந்தம் (ஈட்டி) என்றும் சிலவிடங்களில் கூறப்பட்டிருக்கிறது.

பராசர முனிவர் ஒரு யாகம் செய்தார். அவ்வேள்வி நிருதி யின் வாகனமாகிய பூதத்தை இழுத்துச்சென்றது. அப்பூதம் வருந்தி சிவபெருமானை நோக்கி துதித்து முறையிடவே, வேள்வியை நிறுத்தும்படி சிவபெருமான் கட்டளையிட்டார் யாகமும் நின்றது. வாகனமாகிய பூதமும் மகிழ்ச்சியோங்க உயிருடன் சென்றது என்று புராணம் கூறுகிறது.

நிருதியின் அஷ்டோத்தர சதநாமாவளி

निर्ऋतये नमः
नैर्ऋताधीशाय
रक्षसे
रक्षोगणेश्वराय
कोणपाय
कोणवासिने
क्रव्यादे
क्रव्याशनाधिपाय
असुराय
आशरवराय 10
यमवामदिगाश्रयाय
अस्त्रपाय
रक्तवस्त्राढ्याय
रक्ताक्षाय
रतिलालसाय
पाशिदक्षिणपार्श्वस्थाय
बलिमित्राय
नृवाहनाय
रात्रिचराय
कालराहुमित्राय 20
राजाधिदैवताय
निकुम्भिलाहोमतुष्टाय
रक्तमाल्यानुलेपनाय
शुक्रशिष्याय
पूर्वदेवाय
दैत्याय
दैत्यकुलाश्रयाय
गर्दभाश्वतरारण्यपश्वा-
लम्भनतोषणाय नमः
आभिचारक्रियाधीशाय
कुमुदेभोपरिस्थिताय 30
कालीपतये
कुन्तधराय
कुरुविन्दमणिप्रियाय
कुलाभिमानरहिताय
कुबेरप्रियकारकाय
कालिकापूजनासक्ताय
करवीरसुमप्रियाय
पुण्यशीलाय
पुण्यकराय
पुरुहूतप्रियङ्कराय 40
ईशानसंमुखासीनाय
जयिने
रक्षोवतीप्रभवे
कर्बुराय
कालिकाभक्ताय
कल्याणगुणसंयुताय
कपर्दिपूजनासक्ताय
कूटयुद्धविशारदाय
कलाभिज्ञाय
कालसखाय 50
नीतिज्ञाय
नियतेन्द्रियाय
दशग्रीवसखाय
दान्ताय

नीलवर्णाय नमः
अनसूयकाय
स्वव्यूहरक्षकाय
व्यूहरचनोद्योगकौशलाय
कुलोचितमहावेषाय
कुमुदाक्षाय 60
कठोरपदे
पिङ्गलश्मश्रुकाय
क्रूरदृष्टये
कुटिलमानसाय
देवदैत्यसमाय
देवगणपूज्याय
निराग्रहाय
नित्यानन्दाय
निरीहाय
निकषात्मजाय 70
निराकाङ्क्षाय
निरातङ्काय
निर्भीकाय
निरुपाधिकाय
तामसक्रतुसंतुष्टाय
तमोगुणफलप्रदाय
पातालस्वर्गनिलयाय
दुष्टसन्तुष्टिकारकाय
बलिकर्मविधिप्रीताय
बलाढ्याय 80
बलवर्धनाय

पुलोमबन्धवे नमः
प्राज्ञाय
यातुने
पुण्यजनाय
वशिने
सर्वशास्त्राभिपन्नाय
सूर्यचन्द्राहिताय
प्रभवे
अधर्मभीरवे 90
धर्मात्मने
देवकार्यहितोत्सुकाय
हिंसाभिरुचये
अत्युग्राय
प्रजापालनतत्पराय
दिक्पालसंध्याय
संपूज्याय
सत्यसन्धाय
जितेन्द्रियाय
इन्द्रानुवर्तिने 100
सद्वृत्ताय
निर्भयाय
सत्यसङ्कराय
आसुरास्त्राधिदेवाय
विचित्रमणिभूषणाय
स्थिरावासाय
सर्वदर्शिने
शास्त्रविद्याविशारदाय 108



தருமையாதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்
ஆதீன முகப்பில் குடிமக்களுக்கு அன்னதானம் வழங்கல்



வைத்தீஸ்வரன்கோவில் எல்லையில் தருமையாதீனம்
26 வது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானதிற்குப் பொதுமக்களும்
கோயில் நிர்வாகிகளும் பூரணகும்பந் தந்துவரவேற்றல்:



வைத்தீஸ்வரன்கோயிலில், 26 வது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கு
வரவேற்பளித்த பெருமக்களுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில்
பொன்னாடை போர்த்தி நல்லாசி வழங்குதல்

துறைசையாதீனம் ஸ்ரீ கோமுக்தீசுவரர் வழிபாட்டிற்குப் பின்னர்
தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும்
துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் திருமடத்திற்கு எழுந்தருளுதல்

செந்நெறிதான் வளர்ந்தோங்கும் சீர்த்திருவாவடுதுறையில்

நன்நெறியைக் காட்டிட்ட நமச்சிவாயர் திருமுன்
அந்நெறியை வளர்த்துவரும் அருட்குரவர் இருவர்.

ஆசையறப் பூசைசெய்யும் ஆவடுதண் துறைமடத்தில்

நேசமொடு நின்று வழிபாடு செய்து இருவருமே
வாசமுடன் மலர்மாலை பொன்னுடை அணிவித்தல்.

சிவநெறியை மிகவளர்க்கும் சீர்த்திருவா வடுதுறையில்

திருமூலர் திருமுன்பு திருத்தருமைக் குருமணிதான்
கருநீங்கிக் கதியளிக்கக் கழலிணையைப் போற்றுகின்றார்

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் விரும்பி எழுந்தருள்கின்ற
புள்ளிருக்கு வேளூரில் பொற்பார்ந்த வரவேற்பு



முடியாட்சி கண்டிட்ட முற்கால மன்னரெலாம்
கற்கோயில் பலதந்து காக்க வைத்தா ரன்றைக்கு
குடியாட்சி கொண்டோங்கும் குடிமக்கள் இந்நாளில்
பொற்கோயில் தந்தின்று புதுக்குகிறர் அவ்வழக்கம்.

ஆனந்தபரவசரின் அருள்கொழிக்கும் பூங்காவில்

நெற்பயிரும் நீள்சவுக்கும் நிறைந்திருக்கும் நீள் நிலத்தில்



சென்னை சமயப்பிரசார நிலையத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின்
அஞ்சலிக் கூட்டத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி
கனம். R. சதாசிவம் அவர்கள் உரையாற்றுதல்

வாழ்த்தும் அஞ்சலியும்

டாக்டர், கலைஞர்,
மு. கருணாநிதி
முதலமைச்சர்

சென்னை-19,
7—12—71

அமெரிக்க நாட்டுப் பயணத்தை நான் மேற்கொண்டிருந்த போது அதிர்ச்சிதரும் செய்தி யொன்று கிடைத்தது. தருமை யாதீன கர்த்தர் கயிலைக் குருமணி அவர்கள் மறைந்துவிட்ட அந்தச் செய்தி பக்தியுள்ளம் கொண்டவர்களுக்கு மட்டுமல்ல, சைவசமயவாதிகளுக்கு மட்டுமல்ல, தமிழின்பால் அன்புகொண்ட அனைவருக்கும் வேதனை யளிக்கக்கூடிய ஒன்ருகும். தெய்விகப் பேரவையின் வாயிலாக அவர்கள் தமிழ் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் போற்றத் தக்கவையாகும். அவர்கள் மறைவு எதிர்பாராத ஒன்ருயினும் அவர்களின் நினைவு தமிழ் உள்ளங்களில் என்றும் வாழும்.

(—தமிழ்நாடு தெய்விகப் பேரவை வெளியிட்ட ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் நினைவு மலரிலிருந்து வெளியிடப்படு கிறது.)

என். கிருஷ்ணசாமி ரெட்டியார்,
உயர்நீதிமன்ற நீதிபதி.

சென்னை-1,
17—11—'71.

இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னர் குருபரம்பரை முறைப்படி தருமையாதீனத்தின் ஞானஅரசை ஏற்றருளினர்கள்.

தருமையாதீன குரு பரம்பரையிலே எவரும் காணுத கயிலாய காட்சியைக் கண்டு கயிலைக் குருமகாசந்நிதானம் என்ற சிறப்புத் திருநாமம் தாங்கி அருள் ஆட்சி செய்தார்கள். இவர்களுடைய அருள் ஆட்சியிலே இவ்வாதீனம் அடைந்த வளர்ச்சிகள் எண்ணிலடங்கா. இவர்களுடைய காலத்தில், காலத்திற்கேற்ப சிலமாறுதல்களைச் செய்துகொண்டு முன்ஞேர்கள் கடைப்பிடித்து வந்த வைதீக தர்மத்தில் வழுவாமலும், லௌகிக பரிபாலனத்தில் இவர்களுக்கு மிக்கார் யாருமில்லையென்று போற்றும்படி மக்க ளோடு மக்களாகக் கலந்துஉறவாடி, உபதேசித்தும், அவர்களைத் தம் வழியில் இழுத்துப் பக்குவப்படுத்தி அவர்களை நல்வழியில் சமயநிலை பிறழாது வாழ வழி வகுத்தார்கள். அவர்களுடைய

நிர்வாகங்களில் இருக்கும் கோயில்களில் காலத்திற்கேற்ற மாறுதல்கள் செய்து ஆலய சொத்துக்களைக் காத்து வருவாய்களை உரிய முறையில் சேர்த்து, அவற்றைச் சேமித்து ஆலயங்களிலே நடக்க வேண்டிய நித்திய நைமித்திக நியமங்களை வேதாகம முறைப்படி சிறப்புற நடத்தி வந்தார்கள். எல்லோரும் வியக்கும் வண்ணம் அவர்களுடைய ஆட்சியிலே இருக்கும் திருக்கோயில்களை அப்போதைக்கப்போது தங்கள் நேர் பார்வையிலேயே பழுது பார்த்துத் தூய்மையாக வைத்திருந்தார்கள். இவர்கள் காலத்திலேயே இவர்களுடைய ஆள்கையிலே இருக்கும் எல்லாக் கோயில்களையும் பல லட்சக்கணக்கில் பொருள் செலவு செய்து திருப்பணிசெய்து முடித்தார்கள். இறைவனுக்குத் தமிழ் அர்ச்சனை மிகவும் உகந்தது என்ற எண்ணமுடையவர். தமிழ் மொழியிலே மிகுந்த பற்றுடையவர்களாயினும் சைவ சமயக் கருத்துக்களை உலகத்திலுள்ள மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் வடமொழியிலும், ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் நூல்களை அச்சிட்டு இலவசமாக வழங்கினர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சமய ஒருமைப் பாடு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு அடித்தளமாக அமைய வேண்டும்.

சமயப்பற்றே அமைதிக்கு வழிகோலும் என்னும் கருத்தைக் கொண்டு, ஆங்காங்கே நல்லவர்களையும், சான்றோர்களையும் ஒருமிக்க சேர்த்து, சமயப் பிரச்சாரம் செய்ய பலப்பல ஏற்பாடுகள் செய்தார்கள். அவர்களுடைய ஆட்சியிலும், தற்போது 26ஆவது குருமகாசந்நிதானமாக ஞான அரசை ஏற்றுக் கொண்டிருக்கும் பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களுடைய நிர்வாகத்திலும் இருந்த சென்னை தருமபுர ஆதீன சமயப் பிரச்சார இல்லம், சமயத் துறையிலே மக்களுடைய சமய வளர்ச்சிக்கு எவ்வளவு பேருதவி செய்தது என்பது சென்னை மக்கள் அனைவருக்கும் தெரிந்ததே. இவர்களுடைய ஆட்சியில் பொருள்நிலை பெரும் வளர்ச்சியடைந்தது. இவர்கள் அப்பர் பெருமான்போல் தென்னாடுடைய சிவனுக்கு தன் உடல், பொருள், ஆவி, எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து, "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற வாக்கின்படி அயராது, ஓயாது, உடல் நலத்தைக்கொஞ்சமேனும் கருதாது "காசியில் இறக்க முக்தி !' என்ற முன்னோரின் மூதுரைக்கிணங்க இப்பூத உடலை இறைவனிடத்திலேயே சமர்ப்பித்து இரண்டறக் கலந்த பெரும் பாக்கியம் அவர்களுக்கே தவிர வேறு யாருக்கு கிடைக்கும். அவர்களுடைய திருஉருவம் தமிழக மக்களின் மனதிலே என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. என்னிடத்தே பேரன்பு காட்டிய முக்திபெற்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவடிகளுக்கு என்னுடைய அஞ்சலிகளைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

P. SABANAYAGAM, I. A. S.
Chief Secretary
Government of Tamil Nadu,

Fort St. George
Madras-9
18—11—1971.

அன்புடையீர்,

தருமையாதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் பரிபூரணம் அடைந்தது நம் நாட்டிற்கு ஒரு பேரிழப்பாகும்.

அவர்கள் பொறுப்பேற்றது முதல் தமிழ் நாட்டில் உள்ள கோயில்களில் பல, புணருத்தாரணம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்குகின்றன. அவர் செய்த சமயத் தொண்டு போற்றுதற்குரியது.

அவர் பூத உடல் மறைந்தாலும் அவர் செய்த சமயத் திருப்பணிகள், சமயத் தொண்டுகள் நம் நெஞ்சை விட்டு அகலாது.

மா. சே. சாரங்கபாணி,

சென்னை.
18—11—71.

தருமையாதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் காசித்தலத்தில் பரிபூரணம் எய்தி தருமையில் சிவசமாதியடைந்துள்ளார்கள். ஏறக்குறைய 26 ஆண்டுகள் அருளாட்சி செலுத்திய தருமையிலேயே சிவசமாதி எய்தியது சாலப் பொருத்தமே.

அவர்களது பூதஉடல் மறைந்துள்ளதேயாயினும் மறைவினை மனம் ஒப்ப மறுக்கின்றது. நல்ல வசீகரமான தோற்றம், உடல்கட்டு, கம்பீரமான பார்வை, சிவந்த திருமேனி, ஆட்சி முறைக்கேற்ற சொல், பாவம், நிர்வாகத் திறம், இன்ன காரியத்தை இன்னரால் செய்து முடிக்கவேண்டும் என்ற திறனய்வுத் திறம் – இவையனைத்தும் ஒரு சேர விளங்கிய அவர்கள் கண் முன்னர் நின்று, உரையாடி, ஆட்சி செலுத்திக்கொண்டேயிருப்பதாக ஒரு பிரமை.

திருக்கயிலாய தரிசனம், 27 ஆலயங்களைப் புதுப்பித்துக் குடமுழுக்கு செய்தமை, இவ்வாலயங்களனைத்திலும் பூசைகள் காலந் தவறாது நடைபெற்றுவர ஏற்படுத்தியது, ஆலயங்களைத் துப்புரவாக வைத்துப் போற்றியமை, ஆலய ஊழியர்கள் திருமடத்தின் நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் பணிபுரியச் செய்தமை, அளவற்ற சமய நூல்கள் வெளிவரச் செய்தமை, ஆகம நூல்கள் சைவத்தமிழ் நூல்கள் இவற்றில் பலவகைப் பட்ட மாணவர்க்கும் பயிற்சியளித்தமை ஆகிய இவையனைத்தும் அன்னாரின் அற்புதச் சாதனைகள்.

தமிழ்நாடு தெய்வீகப் பேரவையினை அமைப்பதில் ஊக்கம் காட்டி முழு ஒத்துழைப்பையும் நல்கினார்கள். திருமடங்களும் ஆலயங்களும் இக்கால நிலைக்கேற்ப சமயப் பணிகளிலும் ஈடுபாடுகொண்டு உழைப்பினை நல்கவேண்டும் என்னும் உயரிய நோக்கத்துடன் அமைந்த இந்நிறுவனத்தின் திறன்மிக்க தலைவராக சில ஆண்டுகள் விளங்கினார்கள்.

பொருட்செல்வத்தை வாரி வழங்கும் பெரு வள்ளலாகவும், அருட்செல்வத்தை அள்ளி வழங்கும் அருளாளராகவும், எல்லோருடனும் இனிமையாகவும் எளிமையாகவும் பழகும் நற்பண்பு படைத்தவர்களாயும் விளங்கினார்கள்.

இவர்களது சீரிய பணிகளனைத்திலும் இடையறா ஊக்கம் கொண்டு உழைத்த 26ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் அப்பணிகளில் மேன்மேலும் ஈடுபட்டு சைவ உலகம் போற்றிப் புகழத்தக்க விதத்தில் அருளாட்சி புரிவார்கள் என்பது திண்ணம்.

தருமையாதீன 25ஆவது குருமகாசந்நிதானத்தின் ஆன்மா சுத்தாத்வித சைவசித்தாந்த பரமுத்தியில் பரமானந்தத்தில் திளைக்கும் நற்பேற்றினைச் சித்தித்து உய்வோமாக.

UNIVERSITY OF MADRAS

P. Thirugnanambandam M. A. L. T.,
Registrar.

2 10, Sambasivam Street
T. Nagar, Madras-17.
12—11—1971.

நமது தருமையாதீன முதல்வர் அவர்கள் காசியம்பதியில் சிவனடியே சிந்திக்கப்பெற்று அப்புண்ணியப்பதியிலே பூத

உடலை நீத்து சிவனடி சேர்ந்தார்கள் என்ற செய்தி எம்ம னோர்க்கு அதிர்ச்சியைத் தந்தது. ஞாயிறன்று அவர்களிடம் பெற்ற ஆசியே இறுதி ஆசியாக இருக்கும் என்று நான் எண்ண வில்லை. அவர்களது சிவபுண்ணியம் என்றும் நிலைபெறும். குடமுழுக்கு பெற்ற கோவில்களை எண்ணும்தோறும் அவர்கள் திருமுகம் தோன்றும்.

ஆதீனம், அவர்கள் அமைத்த பாதையில் செல்ல திருவருள் முன்னிற்கும் என்று எண்ணுவோமாக.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல்துறைத்தலைவர்
பேராசிரியர்,

டாக்டர், ச. அகத்தியலிங்கம் எம். ஏ., பிஎச். டி. அவர்கள்

"தமிழ்நாடு செய்த தவப்பயனை அவதரித்தவர்கள் தருமை யாதீனம் 25ஆவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள். சைவத்தையும் தமிழையும் தம் முடைய இருகண்களாகக் கொண்டு தொண்டுபல புரிந்தவர்கள் அவர்கள். பல ஆண்டுகளாகத் திருத்தொண்டின் வாயிலாக அவர்களை அறிந்திருந்த எனக்குக் கடந்த இரு ஆண்டுகளாகத் தான் நெருங்கிப்பழகும் பேறு கிடைத்தது. இனிமையான தோற்றத்தையும், அருட்பால் பொழியும் திருமுகப்பொலிவையும் கொண்டு விளங்கிய அவர்கள் பரிபூரணம் அடைந்தும் என் நெஞ்சின் நிழலில் நீங்காமல் இருப்பதை உணர்கிறேன். அவர் களுடைய தமிழ்ப் பணியும் சைவப்பணியும் தழைத்தோங்க, 26ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அரும்பணி ஆற்று வார்கள் என்ற ஒளிக்கதிர் என்கண்முன்னே வீசக்காணுகிறேன். சிறந்ததமிழ் அறிவும் பரந்த ஞானமும் கொண்டு விளங்குகின்ற குருமகாசந்நிதானம் அவர்கள், சைவப்பிழம்பாய்-தமிழ் ஒளியாய் இருக்கக்கண்டு அத்தகு நிலையைத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துவதன்றி வேறொன்றும் அறியேன். வாழ்க தருமை யாதீனத்தின் தமிழ்ப்பணியும் சைவப்பணியும்."

செய்திகள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின்
குருமூர்த்தச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனத்தில் 25வது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து செயற்கரும் செயல்கள் ஆற்றிப் பரிபூரணம் எய்திய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் சமாதிகூடி 1 மண்டலம் பூர்த்தியானதை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. தருமையாதீனம் 26வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இவ்வழிபாட்டைச் சிறப்புறச்செய்வித் தருளினார்கள். தருமையாதீனத்திருமடம் தேவஸ்தான அலுவலகங்களின்காரியஸ்தர்கள் பணியாளர்கள் அனைவரும் இவ்வழிபாட்டில் காணிக்கைகள் செலுத்திக் கலந்துகொண்டு மகிழ்ந்தனர்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம். என். கிருஷ்ணசாமி செட்டியார், சென்னை அறநிலையத்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் முதலியோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் இருவருக்கும்பொன்னாடைகள் போர்த்திச் சிறப்பித்தார்கள். நண்பகல் மாகேசுரபூசை நடைபெற்று

குருபூஜை விழா

தருமையாதீனம் இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசதேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 3—1—72 திங்கட்கிழமையன்று விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளி சிறப்பு வழிபாடாற்றினார்கள். மாலை வழிபாட்டில் தருமையாதீனம் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் அருளிய "திருவருட்பாத் திரட்டு" என்ற நூல் வெளியிடப்பெற்று அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. வழிபாட்டிற்குப் பின்னர் காலை மாலை இருவேளைகளிலும் திருவருட்

பாக்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அருளாசியோடு காலையில் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் தொடங்கி நடைபெற்றன. தருமையாதீனப் புலவர், மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களின் முன்னுரையோடு மாலை நிகழ்ச்சி தொடங்கப்பெற்றது. ஆதீனத்திருக்கூட்டத் தம்பிரான் சுவாமிகளும், ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர்களும் திருவருட்பாக்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். காலை மாலை இருவேளைகளிலும் மாயூரம் முதலிய இடங்களிலிருந்தும்பெருமக்கள்பலர் வந்துவழிபட்டுமகிழ்ந்தனர்.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

துறைசையாதீனத்திற்கு எழுந்தருளல்

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் துறைசை ஆதீனத்தின் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ வைத்திய நாதப்பெருமானையும், ஆதிகுருமூர்த்திகளாகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகளையும் கவுணிய ஊரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுத்து அருள் வழங்கிய ஸ்ரீ கோமுக்தீசுவரரையும், திருவிசைப்பாப் பாடல்களை அருளிய திருமாளிகைத் தேவரையும், மூவாயிரம் தமிழருளிச்செய்து தமிழகத்தை வாழ்வித்த திருமூலரையும் வழிபடவேண்டும் என்ற பெருவிருப்பத்தோடு துறைசையாதீனத்திற்கு 15—12—71 புதன்கிழமையன்று எழுந்தருளினார்கள்.

அங்கு தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தை ஆதீன மடாலய முகப்பில் மங்கல இன்னிசை வாத்தியங்கள் முழங்க ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்கள் வரவேற்றார்கள்.

தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் முதலில் துறைசை ஆதீனம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானை வழிபட்டு, ஆதி குருமூர்த்திகளாகிய ஸ்ரீ நமச்சிவாய மூர்த்தியின் திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள். துறைசை ஆதீன மகாசந்நிதானத்தின் திருவுள்ளத்தின் வண்ணம், தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் நமச்சிவாயமூர்த்திகளுக்குச் சிறப்புவழிபாடுசெய்துதாம் நமச்சிவாயமூர்த்திகளுக்குஅணிவிப்பதற்காக எடுத்து வந்த ஏறுமுக உருத்திராக்க கண்டிகையை அணிவித்து மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் சந்நிதி ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் சந்நிதி ஆகிய இரு சந்நிதிகளிலும் துறைசை மகாசந்நிதானம் தருமை மகாசந்நிதானத்திற்கும், துறைசை மகாசந்நிதானத்

திற்குத் தருமை மகாசந்நிதானமும் பொன்னுடை போர்த்தி மலர் மாலை அணிவித்துப் பண்பு நலம் பாராட்டிக்கொண்டார்கள்.

பின்னர், நானில மக்களின் நலங்கருதி சிவபாத இருதயர் செய்யும் வேள்விக்கு ஆயிரம் பொற்காசுகளை உலவாக்கிழியாக திருஞானசம்பந்தருக்கு வழங்கிய ஸ்ரீ கோமுக்தீசுவரருக்கு தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபட்டு மகிழ்ந்தார்கள்,

திருவெண்ணெய்நல்லூருக்கு எழுந்தருளல்

சிவஞானபோதத்தை அருளிச்செய்து சிவநெறியைத் தெள்ளத்தெளிய விளக்கியருளியவரும் சைவ ஆதீனங்களின் முதலாசிரியரும் ஆகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர்அருள் பெற வேண்டுமென்ற திருவுள்ளக் குறிப்பால் திருவெண்ணெய் நல்லூருக்கு எழுந்தருளி ஸ்ரீமெய்கண்ட தேவரைத் தரிசிக்கத்தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் திருவுளங்கொண்டார்கள்.

அவ்வண்ணமே சிவஞானபோதத்தின் மூலமாக இவ்வுலகத்திற்கு அருள் விளக்கம் செய்து திருவெண்ணெய் நல்லூரில் அடக்கம் ஆகியுள்ள கயிலாயபரம்பரையின் ஞானபிதாவாகிய ஸ்ரீ மெய்கண்ட தேவர் ஆலயத்திற்கு, தருமை, துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் 6—1—72 வியாழக்கிழமையன்று எழுந்தருளினார்கள்.

துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுளக்குறிப்பின் வண்ணம், தருமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் ஸ்ரீ மெய்கண்ட தேவருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து சிறப்பு வழிபாடாற்றி ஸ்ரீ மெய்கண்டதேவருக்கு அணிவிப்பதற்காகத் தாம் கொணர்ந்த ஏறுமுக ருத்திராக்ஷ கண்டிகையை அணிவித்து மகிழ்ந்தார்கள்.

பின்னர் திருவெண்ணெய்நல்லூர் ஸ்ரீ அருட்டுறையீசர் திருக்கோயிலுக்கு எழுந்தருளி ஸ்ரீ கிருபாபுரீசுவரருக்கும் ஸ்ரீ மங்களாம்பிகைக்கும் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து தருமை துறைசை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் வழிபாடாற்றினார்கள்.

முன் அறிவிப்பில்லாமல் எழுந்தருளியபோதும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட சைவ அன்பர்கள் வந்து வழிபட்டு குருவருளும் இறையருளும் பெற்று மகிழ்ந்தனர்.

வள்ளலார் கோயிலில் பாவை மாநாடு

தருமையாதீனம், ஆதீன தேவஸ்தானங்களின் சார்பில் மாயூரத்தில் மிகச்சிறந்த முறையில் பாவை மாநாடு நடைபெற்றது. வள்ளலார் கோயில் மாயூரம் துலாக் கட்டத்தின் வடகரையில் விளங்குவது. இங்குள்ள ஸ்ரீ மேதா தக்ஷிணு மூர்த்தி சிறப்புமிக்க தெய்வம். இக்கோயிலின் முன்பகுதி பல்லாயிரவர் இருந்து கேட்டு மகிழும் வண்ணம் தளவரிசையிட்டு மேடையமைத்து அழகுறுத்தப் பெற்றுள்ளது. மிகப் பெரிய கீற்றுக் காவணம் அமைத்தும், விதானங்கள் தோரண வாயில்கள் அமைத்தும் மாநாட்டுப்பந்தல் அழகுறுத்தப் பெற்றது.

24, 25, 26—12—71 ஆகிய மூன்று நாட்கள் மாநாட்டு, மேடையில் பன்னிருதிருமுறைகள் வெள்ளி விமானத்தில் அலங்கரிக்கப்பெற்றிருந்தது.

24—12—71 வெள்ளி மாலை மாநாடு தொடங்கிற்று. சென்னை உயர்நீதிபதி கனம் திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இந்துசமய அறநிலைய ஆணையர் திரு. K.S. நாசிம்மன் அவர்கள் துணை ஆணையர்கள் மற்றும் பல பிரமுகர்கள் மாலை 6 மணி அளவில் திருக்கோயிலுக்கு வருகை புரிந்தனர். கோயில் வாயிலில் பூரணகும்பமரியாதைகள் செய்யப்பெற்றன. முறையே வழிபாடுகள் செய்விக்கப்பெற்றது

திருவையாறு தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நிகழ்த்தினுர்கள்.

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம். திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் தொடக்கவுரை நிகழ்த்தினுர்கள். மக்களை மக்கள் நிலையிலிருந்து உயர்த்துவது பக்தியே என்று குறிப்பிட்டு பாவை மாநாடுகள் நாட்டில் பக்தி உணர்வை வளர்க்கின்றன என்று கூறி மாநாட்டைத்தொடங்கிவைத்தார்கள். சென்னை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. K. S. நரசிம்மன் அவர்கள் ஞானிகள் நமக்கு விட்டுப்போன செல்வம் அருள்நூல்கள் என்று குறிப்பிட்டு ஆதீனப் பணிகளைப் பாராட்டித் தலைமையுரை கூறினுர்கள்.

தஞ்சை இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. வி. எஸ். கோதண்டபாணி அவர்கள் பாவைப் பாடல்களின் சிறப்பினைக் குறிப்பிட்டுச் சிறப்புரை நிகழ்த்தினார்கள். திருக்குறளார் திரு. வீ. முனிசாமி அவர்கள் பாவை நோன்பு பற்றிப் பேசினார். முதல் திருப்பாடற்பொருளை விளக்கி வளர்தல் என்பது உறங்குதலையும் அதனால் உடல் வளர்தலையும் குறிக்கும் சொல் என்று கூறி விரிவுரைவழங்கினார்.

திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் இருபெரும் பாவைகளை இணைத்து அரியதோர் விரிவுரை வழங்கினார். சைவ வைணவ ஒற்றுமை குறித்துத் திருமுறைகள் திவ்யப்பிரபந்தங்களில் மேற்கோள்கள் காட்டிப் பேசி மகிழ்வித்தார்.

இரவு 9 மணி முதல் சீகாழி தேவஸ்தானம் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. சா. திருஞானசம்பந்தம் மாயூரம் குமரக் கட்டளை திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. சுவாமிநாதன் குழுவினர் பாவைப் பண்ணிசை வழங்கினர்.

25—12—71 சனிக்கிழமை பட்டிமண்டபம். மாலை 6 மணிக்கு திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு வருகை புரிந்தார்கள். கோயில் வாயிலில் பூரண கும்ப மரியாதையோடு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபாடுகள் செய்து வைக்கப்பெற்றது.

பாவைப் பாடல்களில் விஞ்சி நிற்பது தன்னலமா? பொது நலமா? என்ற தலைப்பில் பட்டிமண்டபம் தொடங்கியது.

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள்.

தவத்திரு. அடிகளார் அவர்கள் பட்டிமண்டபத் தலைப்பை விளக்கி முன்னுரை வழங்கினார்கள்.

தன்னலமே என்ற அணியில். திருச்சி தேசியக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர், திரு. சோ. சத்தியசீலன் எம். ஏ., ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான். திரு. இரா. செல்வ கணபதி, பள்ளத்தூர் சீதாலட்சுமி ஆச்சிக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர், திருமதி. சரசுவதி இராமநாதன் எம். ஏ., ஆகியோர் பேசினர்.

பொதுநலமே என்ற அணியில், புத்தனம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர், திரு. அ. வ. இராச கோபாலன் எம்,ஏ., மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரை யாளர். திரு. அ. கலியபெருமாள் எம். ஏ, சென்னை திருமதி. ஜெயகுமாரி பாஸ்கரன் ஆகியோர் பேசினர்.

தவத்திரு. அடிகளார் அவர்கள் முடிவுரையில் இருவர் கருத்துக்களையும் திறனய்வு செய்து பொதுநலமே விஞ்சிநிற்பது என்று முடிவுரை வழங்கினர்கள்.

26—12—71 ஞாயிறு மாலை 6-15 மணிக்கு மூன்றும் நாள் நிகழ்ச்சி தொடங்கியது. வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமி கள் வரவேற்புரை கூறினர்கள்,

சென்னை கலைமகள் ஆசிரியர், செந்தமிழ்ச்செல்வர், திரு. கி. வா. ஜகநாதன் எம். ஏ., அவர்கள் பாவைப்பாடல்களின் கவி நயங்களை விளக்கித் தலைமையுரை நிகழ்த்தினர்.

ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை வித்து வான், திருமதி. ப. நீலா அவர்கள் "பாவையும் பாவையரும்" பற்றியும், திருச்சி தேசியக்கல்லூரி தமிழ் விரிவுரையாளர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ., அவர்கள் "எங்கெழிலென் ஞாயிறு" என்பது பற்றியும் விரிவுரைகள் வழங்கினர்.

இரவு கணநாதர் பொம்மை நாடக சபாவின் மாணிக்க வாசகர் பொம்மலாட்டம் நடைபெற்றது.

தருமை ஆதீனம்

சென்னை, சமயப் பிரசார நிலையம்

1971ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த நிகழ்ச்சிகள்

2—10—71 நரசிங்கமுனையாடுவார் நாயனர் குருபூஜை விழா, தேவார ஆசிரியர் திரு. ஞானப்பிரகாசத்தால் பாராயணம் செய்யப்பட்டது. வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர் களால் புராண விரிவுரை நிகழ்த்தப்பட்டது. தேவார வகுப்பு மாணவர்கள், மாணவிகள் கலந்துகொண்டனர்.

6—10—71 ருத்திரபசுபதி நாயனர் குருபூஜை விழா தேவார வகுப்பு ஆசிரியர் ஞானப்பிரகாசத்தால், பிரார்த்தனைப் பாடல்கள் நிகழ்த்தப்பட்டது. வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்கள் புராண விரிவுரை நிகழ்த்தினர்கள். நிலைய அன்பர்களும், தேவார வகுப்பு மாணவர், மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

9—10—71 மாலை 6 மணிக்கு திருநாளைப்போவார் நாயனர் குருபூஜை விழா பதிகங்கள் பாராயணத்துடன் நடைபெற்றது. வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களால் புராண விரிவுரை நிகழ்த்தப்பட்டது. மாலை 7 மணிக்கு வேலூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா திரு. எஸ். ஜி. இரத்தினம் அய்யர் அவர்கள் தலைமையில் நிகழ்த்தப்பட்டது திரு. ஞானப்பிரகாசம். திரு. ராமலிங்கம் இருவராலும் வேலூர் தேவாரம், திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தி, அன்பர்களுக்கு சந்தனக் குழம்பு, விபூதி பிரசாதம் வழங்கப்பட்டது. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை-நன்றியுரை கூறினர்கள்.

16—10—71 அருணந்திசிவாசாரியார் குருபூஜை விழா. காலையில் வழிபாடும், மாலையில் இராவ்சாகிப் திரு; நல். முருகேச முதலியார் அவர்கள் தலைமையில், "சிவஞான சித்தியார்" விளக்கம் திரு. க. வஜ்ஜிரவேலு முதலியார், பி. ஏ., எல். டி., அவர்களாலும், "இருபா இருபஃது" திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்களாலும், விரிவுரை நிகழ்த்தப்பட்டது. தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் கூறினர்கள்.

22—10—71 பூசலார் நாயனர் குருபூசை விழா தேவார ஆசிரியர் பதிகம் பாராயணம், பிரார்த்தனையுடன் திருமதி. மீனாக்ஷிசுந்தர சிவை அவர்களால் புராணவிரிவுரையுடன் நிகழ்வுற்றது.

24—10—71 ஐயடிகள் காடவர்கோன் நாயனர் குருபூசை விழா; திருமதி. ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரசிவை அவர்கள் புராண விரிவுரையுடன் நடைபெற்றது.

31—10—71 நிலையத்தின் மாதாந்தர வழிபாடு சென்னை, இராயப்பேட்டை முத்துமுதலித் தெருவிலுள்ள ஸ்ரீ சித்திபுத்தி விநாயகர் ஸ்ரீ சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. தவத்திரு, சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் வித்துவான் திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்களும்.

திரு. வி. என். ஆறுமுகம் அவர்களும், நிலையிலா உலகத்தில் நிலையுடைய இறையருளைப் பெற வழிபாட்டின்மூலம் எல்லோரும் முயல வேண்டும் என்று வற்புறுத்தினர். சுவாமிகள் தலைமை யுரையில் வினைவழியே நமக்கு வாழ்வு அமையினும் வினையென்று சொல்லி சோம்பிக் கிடக்காமல் என்கடன் பணிசெய்து கிடப்பதே என்று முயன்று உயர்வடைய வழிகாண்பதே வழிபாட்டின் நோக்கம் என்று குறிப்பிட்டார்கள். ஆலய அறங்காவலர்களும், சிவாச்சாரியர்களும் ஊர்ப்பொதுமக்களும்குழுவினரைவரவேற்று வழிபாட்டையும், சமயப்பிரசாரத்தையும் சிறப்பாக நடத்தி வைத்தார்கள். திரு. எஸ். ஞானப்பிரகாசம், திரு. ந இராம லிங்கம், இருவரும் திருமுறை ஓதி மகிழ்வித்தனர். வித்துவான் திரு. கு புண்ணியகோடி நன்றி நவின்றார்கள்.

3—10—71, 10—10—71. 17—10—71, 31—10—71 தேதி களில் ஞாயிற்றுக்கிழமை மாலை மணி 4 முதல் 5-30 வரை "சிவஞானசித்தியார் வகுப்பு" திரு. ந. ரா. முருகவேள் அவர் களால் நடத்தப்பெற்றது.

4—10—71, 11—10—71, 18—10—71, 25—10—71, சோமவாரம் தினங்களில் மாலையில் திருக்கயிலைப் பதிகம், போற்றிப் பதிகம், நிலைய தேவார வகுப்பு ஆசிரியர் மாணவ, மாணவிகளால் பாராயணம் நிகழ்த்தி மாணவ அன்பர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும். ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை

B. A., B. L., அவர்கள்

குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருதுஷு தைமீ 1உ முதல் 29உ முடிய)

(15—1—72 முதல் 12—2—72 முடிய)

விரோதிகிருது வருஷம் மார்கழி மாதம் 30-ந்தேதி சுக்கிர வாரம் 14—1—72 கிருஷ்ணசதுர்தசியும் மூலநக்ஷத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் உதயாதி 32 நாழிகை 19 விநாடிக்கு தனுர் ராசியிலிருந்து மகரசங்கராந்தியாக கடகலக்னத்தில் உத்தராயண பிரவேசம் செய்கிறார். அதன் பலன் உலகில் எங்கும் அமைதியும் ஈசுவரபக்தியும் தான்யவிருத்தியும் சுபிக்ஷமும், விலைவாசிகள் குறைந்து பிரஜைகளுக்கு ஸந்தோஷமும் ஏற்படும். தெய்வ சக்தி ஓங்கும்

குறிப்பு :- மகரராசி பிரவேசகாலத்தில் ஸங்கிராந்தி தேவிரூபமாய் பிரவேசிப்பதாலும், நாமகரணம் ஸ்நானவஸ்திராதிகள் ஆயுதம் வகிப்பது முதலானதுகளாலும் நமது பாரத பூமிக்கு கிழக்கே வடக்கே உள்ள தேசங்களில் அமைதிக் குறைவும் யுத்தபயமும் ஏற்படும். இந்தியாவில் விந்தியோத்ர தேசங்களில் வியாபாரிகளுக்கும் பதிவிரதா ஸ்திரீஜனங்களுக்கும் வேதாசாரமுடையவர்களுக்கும் பீடைகளும் வியாதி பயமும் ஏற்படும். தெய்வசக்தி உள்ள பிரதேசங்கள் காப்பாற்றப்படும் சுபிக்ஷம் உண்டாகும். தக்ஷிணதேசம் ஜயிக்கும் சுபம்.

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். தூரதேசத்தில் இருந்து அழைப்புப் பத்திரம் வரும். தொழில் மாறும். ஜீவனம் ஓங்கும். சுபகாரியங்கள் மூலம் அதிக செலவுகள் உண்டாகும். ஆரோக்யம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். அடிக்கடி வீண் அலைச்சல்கள் ஏற்படும். வீணான அபவாதங்கள் ஏற்படும், வியாதி நிவர்த்தியாகும் புதிதான தொழில் ஏற்படும். திங்கள் செவ்வாய் சுபமாகும்,

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். வெகுகாலமாக எதிர்பார்த்து நடைபெறாத காரியங்கள் எல்லாம் நடக்கும், விவாஹாதி மங்கள காரியங்கள் ஏற்படும் ஜீவனம் ஓங்கும். புதிதான பிரபுக்கள் தரிசனம் ஏற்படும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். (புதன், வியாழன் சுபமாகும்)

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். எல்லாக் காரியங்களும் முயற்சியின் பேரத்தால் பூர்த்தியாகும், வரவுக்கு மேல் செலவுகள் இருக்கும். பிரயாணங்கள் இருந்துகொண்டே இருக்கும் புதிதான முறையில் தொழில் ஏற்படும். (வெள்ளி சனி சுபமாகும்)

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். உத்தியோகத்தில் மேல்பதவி கிடைக்கும். நஷ்டமான பொருள்கள் வந்துசேரும். ஆரோக்யம் தரும். கிரக சுகம் ஓங்கும் வம்சம் விருத்தியாகும். (ஞாயிறு, திங்கள் சுபமாகும்)

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதாக பிரபுக்கள் தெரிசனமும் மேல்பதவிகளும் ஜீவனத்தில் மேன்மையும் ஏற்படும் புதிதான முறையில் தொழிற்சாலை ஏற்படும் புத்திராதிகளால் நன்மை உண்டாகும், (செவ்வாய் புதன் சுபமாகும்)

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும், பூர்ணமாக சுபத்தைத்தரும். எல்லாம் தெய்வபலத்தால் சாத்தியமாகும். அடிக்கடி தெய்விக காரியங்களும் பிரயாணங்களும் இருந்துகொண்டே இருக்கும். சிநேகிதர்களின் மூலமாயும் மேலோர் பெரியோர்களின்

அன்பினலும், சௌகாரியங்களும் உண்டாகும். (வியாழன் வெள்ளி சுபமாகும்)

8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். புத்திரோத்பவம் ஏற்படும். சுபகாரியங்கள் நடந்துகொண்டு இருக்கும். பிரயாணங்களும் இருந்துகொண்டு இருக்கும். குடும்பம் விருத்தியாகும். நஷ்டமான பொருள்கள் வந்து சேரும். (சனி, ஞாயிறு சுபமாகும்)

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$.

துனுர்ராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தொழில் அடிக்கடி மாறிக்கொண்டு இருக்கும். ஸ்தாவர ஜெங்கமங்கள் மாறும், வரவு செலவு சமமாக இருக்கும். புத்திராதிகளால் குடும்பத்தில் நன்மை உண்டாகும். (திங்கள் செவ்வாய் சுபமாகும்)

10. மகரம்– உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபமாகவே இருக்கும். மேலோர் பெரியோர்களின் அன்பினல் எல்லாக்காரியங்களும் முடிவடையும். புதிதான வாகன லாபம் உண்டாகும். ஜீவனம் ஓங்கும் ஆரோக்யம் உண்டாகும். வியாதி நிவர்த்தியாகும். (புதன் வியாழன் சுபமாகும்)

11. கும்பம் – அவிட்டம் $\frac{1}{2}$ – சதயம் – பூரட்டாதி $\frac{3}{4}$,

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். குடும்பத்தொல்லைகள் ஏற்படும். வரவு செலவு சமமாக இருக்கும். சுபகாரியங்கள் மூலம் பிரயாணங்களும் சந்தோஷங்களும் உண்டாகும். தெய்வபலம் அதிக அதிகமாகும். வெகுகாலம் நடைபெருத காரியங்கள் நடைபெறும். இல்லறசுகம் அதிகமாகும். (வெள்ளி, சனி சுபமாகும்)

12. மீனம் – பூரட்டாதி $\frac{1}{4}$ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். நினைத்த காரியங்கள் எல்லாம் தவக்கத்துடன் பூர்த்தியாகும். சுபகாரியங்களின் பொருட்டு அடிக்கடி பிரயாணங்கள் இருந்துகொண்டு இருக்கும். செலவுகள் அதிகமாக இருந்துகொண்டு இருக்கும். ஜீவனம் ஓங்கும். தெய்வ பலத்தால் சகலமும் ஸாத்தியமாகும். சுபம்.